விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 01 செவ்வாய்க்கிழமை (17.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333





# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களை முகாமுக்கு அழைத்துச் சென்றது அரசு

## ஆறு மாதங்களின் பின் அனுமதி

(வவுனியா)

**வன்னிப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களை பார்வையிடுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆறு மாதங்களின் பின்னர் நேற்று அரசாங்கத்தினால் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் முகாம்களின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்தனர்.** (14ஆம் பக்கம் பார்க்க)



முன்னாள் முப்படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியதுடன் தனது பதவியிலிருந்து ராஜினாமாச்செய்தார். ஜனாதிபதியைச் சந்தித்த சரத்பொன்சேகா கைலாகு கொடுத்து தனது பணியிலிருந்து விலகிக் கொண்டார்.

## 200 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மத்தியவங்கி தாக்குதல் குற்றவாளி கைது

(கொழும்பு)

1996ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி கட்டிடத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு கொண்டவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நீதிமன்றில் சமுகம் அளிக்காத நிலையிலேயே அவருக்கான தண்டனை முன்னர் விதிக்கப்பட்டிருந்தது.

மத்தியவங்கியின் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொள்வதற்காக வெடிபொருள் நிரப்பிய லொறியை (14ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர் முகாம்களிலிருந்த நெருக்கம் குறைவடைந்துள்ளது!

### ஆனாலும் பிரச்சினைகள் உண்டென தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா இடம் பெயர்முகாம்களிலேயே முன்பிருந்த நெருக்கங்களை விட தற்போது சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பலதரப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன என அங்கு வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக 3 இலட்சம் வரையில் மக்கள் இருந்ததாகவும் இதில் ஒரு இலட்சம் வரை முகாம்களில் இருந்து [illegible] விட்டார்கள் எனவும் தெரிவித்த மக்கள், அதனால் [illegible]டிநீர் பிரச்சினைகள் (02ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதியூதீன் விபத்தில் காயம்

(கொழும்பு)

வவுனியா பகுதியில் நேற்று இட[illegible] பெற்ற வாகன விபத்தில் மீள்குடியேற்ற ம[illegible] பேர னர்த்த நிவாரண அமைச்சர் றிசா[illegible]தீன் காயமடைந்துள்ளதாக தெரிவிக்க[illegible]து.

இது தொடர்பில் மேலும் [illegible]வருவது, நேற்று வவுனியாவி[illegible] மெனிக் பாம் முகாம் பகுதியில் இடம்பெ[illegible]ற விபத்தில் அமைச்சர் பதியூதீன் காயம[illegible]ந்துள்ளார்.

அவர் பய[illegible]ம் (14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் ஆதரவை பெற முஸ்லிம் காங்கிரஸ் தீவிரம்!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன் சேகாவுக்கான ஆதரவை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகாவிற்கான ஆதரவை கூட்டமைப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பொறுப்பை (14ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் பிரியாவிடை நிகழ்வை முப்படைத் தளபதிகள் புறக்கணித்தனர்

(கொழும்பு)

இராணுவத்தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கான பிரியாவிடையளிக்கும் மரியாதை அணி வகுப்பு நிகழ்ச்சியில் முப்படைத் தளபதிகள் கலந்து கொள்ளவில்லை.

முப்படைத்தளபதிகள் கலந்து கொள்ளாத நிலையில் சரத் பொன்சேகா தனக்கு வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா, இராணுவத்தளபதியாக நாட்டிற்கு எந்தக் குறையுமின்றி தனது கடமையை நிறைவேற்றிய திருப்தியுடன் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் நீர்பாசன சபை ஊழியர்களும் தமது தொழிற்சங்க நடவடிக்கையினை நேற்றுடன் கைவிடுவதாக அறிவித்துள்ளனர்.

எனினும் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை (14ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் கேட்ட தேர்தலை நடத்த ஜனாதிபதி மகிந்த பின்னடிப்பு!

### ஐக்கியதேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் கேட்ட ஜனாதிபதித் தேர்தலை நடத்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலை வரும் இந்த நாட்டு ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ பின்னடிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் ஐதேகவின் பேச்சாளர் தெரிவித்ததாவது, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கெத்தாராமா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் போது ஜனாதிபதி மக்களிடம் (14ஆம் பக்கம் பார்க்க)





நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆளுநர் உத்தியோகபூர்வ விஜயம் அண்மையில் கழக உறுப்பினர் இல்லத்தில் நடைபெற்ற போது, இந் நிகழ்வில் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பி.கே.பி.பாலசங்கர் தலைமையுரையாற்றுவதனையும் மாவட்ட ஆளுநர் லயன் லக்ஷ்மன் விஜயசிங்க உரையாற்றுவதனையும் வலுவிழந்து பாதிப்படைந்த பயனாளிகளுக்கு பிரதேச கிராம அலுவலர் தள்ளு வண்டில்கள் வழங்குவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மகசீன் சிறைத் தாக்குதலை எதிர்த்து கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மகசீன் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நமது ஜனநாயக மக்கள் முன்னணியும் மக்கள் கண்காணிப்புக் குழுவும் இணைந்து நடத்தும் ஆர்ப்பாட்டத்திலே அனைத்துத் தரப்பினரும் அணி திரண்டு கலந்து கொள்ள வேண்டும் என மனோ கணேசன் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.

தற்சமயம் வெளிநாடு சென்றிருக்கும் மனோ எம்.பி. வெளிநாட்டிலிருந்து அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்க் கைதிகள் அரசியல் வன்முறைக் குற்றங்களுக்காக சந்தேகத்தின்அடிப்படையில் கைது செய்யப்பட்டு நீண்ட நாள்களாகச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

போர் முடிபடைந்து விட்டாலும் கூட இந்தக் கைதிகளின் வாழ்க்கையிலேயே இது வரை நிம்மதியில்லை. கொழும்பு, மகசீன் மற்றும் சீ.ஆர்.பி., களுத்துறை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி ஆகிய சிறைக் கூடங்களிலும், பூசா தடுப்பு முகாமிலும் நமது சகோதர சகோதரிகள் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தக் கைதிகள் கட்டாயமாக அரசியல் கைதிகளாகத்தான் கருதப்பட வேண்டும். இதில் இரண்டு கருத்துக்கு இடமிருக்க முடியாது. இந்தக் கைதிகளுக்கு ஒன்று பொது மன்னிப்பு அல்லது சட்டரீதியான பிணை, அல்லது புனருத்தான வேலைத் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படுதல் அல்லது விடுதலை ஆகிய நான்கு தீர்வுகளில் ஒன்று உடனடியாக வழங்கப்பட்டேயாக வேண்டும்.

அப்படி வழங்கப்பட்டே ஆக வேண்டும் என்ற கோரிக்கையை எமது மக்கள் கண்காணிப்புக் குழு ஏற்கனவே அரசாங்கத்திடமும் சர்வதேச சமூகத்திடமும் முன்வைத்துள்ளது.

எனவே இந்தக் கோரிக்கைகளை காதிலே வாங்கிக் கொள்ளாத காரணத்தினாலேயே மகசீன் சிறையில் தமிழ்க் கைதிகள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ள நிலைமை உருவாகியுள்ளது.

இந்த நிலைமை தொடருமானால் 1983 ஆம் ஆண்டிலே நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது இதே மகசீன் சிறைச்சாலையில் தமிழ்ச் சிறைக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறுவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

எனவே இந்தப் பிரச்சினையை முதன்மை மனித உரிமைப் பிரச்சினையாகக் கருதி அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே எமது இந்தப் போராட்டத்தை ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிரபா கணேசன், இணை உப தலைவர் சுரேஸ் கெங்காதரன் மற்றும் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் முன்னின்று நடத்தவுள்ளார்கள்.

எமது அழைப்பை ஏற்று மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சிறிதுங்க ஜெசிங்க உட்பட பல்வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள இருக்கின்றார்கள்.

• இந்த ஆர்ப்பாட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு பொரளை மகசீன் சிறைச்சாலைக்கு முன்னால் நடைபெறவுள்ளது. (ச-5)

## மேசன் பயிற்சி நெறி தொடர்பான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை கொல்சிம் (Holcim) சீமெந்து நிறுவனத்தின் அனுசரணையோடு குறுகிய கால மேசன் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

அதற்கமைவான தகவல்களை வழங்கும் நோக்கில் கொல்சிம் நிறுவன உயரதிகாரிகளையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் உயரதிகாரிகளையும் இன்று காலை 9.30 மணிக்கு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்கு வருகை தருமாறு அதன் மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார். (ச)

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட புவியியற் கழகத்தினால் வெளியிடப்படும் யாழ்ப்பாண புவியியலாளன் மற்றும் திட்டமிடல் ஆகிய நூல் வெளியீட்டுக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என புவியியற் கழகத் தலைவர் எஸ்.நேசதர்சன் அறிவித்துள்ளார். இச் சீட்டிழுப்பு கடந்த 11 ஆம் திகதி நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பேராசிரியர் கைலாசபதியின் நினைவுப் பேருரை நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழகத்தின் மூதவர்களில் ஒருவரும் யாழ்.வளாகத்தின் முதல் தலைவருமான பேராசிரியர் க.கைலாசபதியின் நினைவுப் பேருரை நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனத்தின் மானிடவியல் பேராசிரியர் முனைவர் பக்தவத்சல பாரதி, பாணர்மரபு-பழங்குடி பாணர், வீரயுகப்பாணர், பிற்காலப்பாணர், திராவிடர் இன வரைவியல் நோக்கு என்னும் தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்தவுள்ளார்.

தமிழ் வீரயுகப்பாடல்கள் பற்றி உலகப் புகழ்பெற்ற ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் கைலாசபதியை பொருத்தமான முறையில் நினைவு கூருவது இந்நிகழ்வில் குறிப்பிடத்தக்க விடயமாகும். (ச)

## சுவரொட்டிப் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச எச்.ஐ.வி. தினத்தையொட்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் சுவரொட்டிப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

எச்.ஐ.வியிலிருந்து எம்மைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் இடம்பெறவுள்ள இப் போட்டியில் பிரிவு 1 இல் தரம் 10உம் அதற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும் பிரிவு 2 திறந்த போட்டியும் இடம்பெறவுள்ளது.

இதில பங்கேற்க விரும்புபவர்கள் இதற்கான விண்ணப்பங்களை பணிப்பாள, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு கடித இடது மூலையில் சுவரொட்டிப் போட்டி-2009 என்று குறிப்பிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும். அதில் பாடசாலை மாணவர்களுக்கான பிரிவு 1 போட்டிகள் 2 மணி தொடக்கம் 5 மணி வரையும் ஏனையோருக்கான திறந்த போட்டி காலை 9 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச)

## இடம்பெயர் முகாம்களிலிருந்த...

...லத்கூட பிரச்சினைகள் சற்றுக் குறைந்திரு...தாகவும் தெரிவித்துள்ளனர். எனினும் ஏன...ய பிரச்சினைகள் குறித்து தமது அதி ருப்தி...யும் வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் ...மைப்பின் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உலங்கு வானூர்தியில் அரசின் ... கண்காணிப்பின் கீழ் நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

இது குறித்து மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் விசேட செவ்வி ஒன்றை வழங்கியிருந்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பாக தாம் முகாமிற்குச் சென்ற நேற்றுவரை விசாரணை என்ற பெயரில் ... அல்லது ...து கணவன் ... பெற்றோ, சகோதரர்கள் ...ால அழைத்துச் செல்லப்படுவதாக ...ல் ஒரு சிலரை தவிர ஏனையோர் மீள வருவதில்லை என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆரம்பப் பாடசாலையில் 700இல் இருந்து 800 வரையான மாணவர்கள் கற்றுக்கொண்டிருந்தார்கள் 80 ஆசிரியர்கள் அவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருந்தார்கள் 700 - 800 மாணவர்களுக்கு 9 ஆசிரியர்கள் என்பது பற்றாக்குறையாகவுள்ளது.

அந்த ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள். ஆனால் அவர்களுக்கு எந்தவித கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை. என அவர்கள் தெரிவித் தனர்.

மேலும் வன்னி கட்டளைத்தளபதி காட்டிய பட்டியலின் படி 56 ஆயிரத்து 247 பேர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மீள குடியேற்றப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 465 பேர் மட்டக் களப்பு மாவட்டத்திலும் 6 ஆயிரத்து 576 பேர் திருகோணமலை மாவட்டத்திலும் 8 ஆயிரத்து 579 பேர் மன்னார் மாவட்டத்திலும் 19 ஆயிரத்து 943 பேர் வவுனியா மாவட்டத் தில் 583 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5917பேரும் கண்டி மாவட்டத்தில் 12 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 779 பேருமாக மொத்தமாக ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 117 பேர் முகாம்களில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு அழைத்துச் சென்று மீள்குடியேறியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

யுத்தம் காரணமாக வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் பொதுமக்கள் தொடர்பில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தென்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா தெரிவித்தார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் முதல் தடவையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இடம்பெயர் முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இடம்பெயர் மக்களை மீள்குடியேற்றுவது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவே தோன்றுகின்றது. இராணுவப் படை வீரர்கள் மற்றும் சிவில் உத்தியோகத்தர்கள் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர் எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெயர் முகாம்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் பார்வையிட்டுள்ளனர்.

இடம்பெயர் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா மேலும் தெரிவித்தார். (ச-5)

## ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் நிறுத்த ஜே.வி.பி. தீர்மானம்

(கொழும்பு)




ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரதான அலுவலத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் குறிப்பிட்டார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற முடிபுக்கு ஜே.வி.பியின் மத்திய செயற்குழு தீர்மானித்தது.

ஜே.வி.பி. மாத்திரம் ஆதரிக்கும் வேட்பாளர் அல்ல. ஏனைய கட்சிகளும் அந்தவேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச-5)


## தவறிவிட்டது

சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த தேவராசா நிலக்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (923001964 V) தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேலுள்ள எனது முகவரியில் ஒப்படைத்து உதவவும். (C-3731)


அச்சுவேலி வட்ட அரிமாக் கழகத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த ஆளுநர் லயன் லக்ஸ்மன், விஜயசிங்க மங்கல விளக்கேற்றுவதையும், மாணவனுக்கு அன்பளிப்பு வழங்குவதையும், ஞாபகார்த்த மரக்கன்றை நடுவதையும் படங்களில் காணலாம்.

## ஆதீனம் வழங்கும் நிதியில் இலங்கையில் உள்ள மூவாயிரம் இந்துக்கோயில்கள் புதுப்பிக்கப்படும்

### சுதர்சன நாச்சியப்பன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆதீனம் வழங்கும் நிதியில் இருந்து இலங்கையில் தமிழர்கள் பகுதியில் உள்ள 3000 இந்துக்கோயில்கள் புதுப்பிக்கப்படும் என்று மக்கள் குறைதீர்ப்பு அமைச்சகங்களுக்கான பாராளுமன்ற நிலைக்குழுத் தலைவர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் பழ.முத்தப்பன் உரையுடன் "சைவசித்தாந்த சாத்திரங்கள்" (மெய்கண்ட சாஸ்திரங்கள்) நூல் வெளியீட்டு விழா திருச்சியில் நடைபெற்றது. விழாவில் திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது சீர்வளர் சீர் குருமகா சந்நிதானம் தலைமை தாங்கி நூலை வெளியிட்டார்.

முதல் நூலை சட்டம், நீதி பணிப்பாளர்கள் நலன் மற்றும் மக்கள் குறைதீர்ப்பு அமைச்சகங்களுக்கான சுதர்சன நாச்சியப்பன் எம்.பி. பெற்றுக்கொண்டார்.

விழா முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுதர்சன நாச்சியப்பன் எம்.பி யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் தான் சைவசித்தாந்தத்தை உலகம் முழுவதும் பரப்பினார்கள். அதனால் தான் இலங்கையில் 4980 இந்துக்கோயில்கள் உள்ளன. இவற்றில் 3000 கோயில்கள் ஆதீனம் வழங்கும் நிதி உதவியுடன் புதுப்பிக்கப்படும் என்றார். (ஓ-6)

## முல்லைத்தீவில் கண்ணிவெடியகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக, முல்லைத்தீவு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் முல்லைத்தீவுக்கான விஜயத்தை மேற்கொண்ட கத்தோலிக்க திருச்சபை பிரதிநிதிகள் குழுவிடம் இராணுவத்தினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் தற்போது மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதேசங்களுக்கு, கரித்தாஸ் அமைப்பின் தேசியத்தலைவர் அருட்தந்தை டேமியன் பெர்ணான்டோ தலைமையிலான குழுவினர் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதற்கிடையில் முல்லைத்தீவு குடியமர்த்தப்படுகின்ற மக்களுக்கு ஐயாயிரம் ரூபா ரொக்கப்பணமாக வழங்கப்படுவதுடன், 25 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்கில் இடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## விசேட கல்விப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து விசேட கல்வித்துறை முகிழ்நிலை ஆசிரியர்களுக்கிடையே நடத்திய விசேட கல்விப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**கட்டுரைப்போட்டி**

*1ஆம் வருடம்*

இருவர் முதலாமிடம் உமா.வ, விஜயநிதி.ரா, இருவர் இரண்டாமிடம் பிரியகாசினி.க, சிவாநந்தினி.சி,. வினோதரன்.சி.

*2ஆம் வருடம்*

கோபு.ந, அனோஜா.ம

**சைகை மொழிப் போட்டி**

*1ஆம் வருடம்*

பிரியகாசினி.க,துசாந்தி.சி, தனேஸ்வரன்.ம

*2ஆம் வருடம்*

சாருமதி.சு, சதீஸ்னி.யோ, இருவர் மூன்றாமிடம் சிந்துஜா.க,ரேணுகா.சி.

**கவிதைப்போட்டி**

*1ஆம் வருடம்*

விஜயநிதி.ரா,மாணல்.சி, ரஜிந்தன்.பா

*2ஆம் வருடம்*

கொலின்ஸ்ரன்.ஜெ,அனோஜா.ம,இருவர் மூன்றாமிடம் தர்மகுமார்.கு,கோபு.ந

**பிறைல் மொழிப் போட்டி**

*2ஆம் வருடம்*

சுரேந்திரன்.க,ரேணுகா.சி, இருவர் மூன்றாமிடம் அனோஜா.ம, நிசாந்தன்.த

*1ஆம் வருடம்*

துசாந்தி.சி, ஜெயமதன்.இ, விஜயநிதி.இ. (ஓ)

## மனோ சக்தியை வளர்ப்பது எப்படி? கருத்துரை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மாகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள நிகழ்வில் பரு.ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு "மனோ சக்தியை வளர்ப்பது எப்படி" எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.

அத்துடன் கதை சொல்லும் நேரம் நிகழ்வின் 7 ஆவது தொடர் நிகழ்வாக அப் பாடசாலையின் 6 ஆம் ஆண்டில் கற்கும் மாணவர்களுக்கு சுவாமி விவேகானந்தர் கூறிய கதைகள் சொல்லவுள்ளார். (ஓ)

## துணுக்காய் - கிளிநொச்சி பஸ்சேவை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பம்

(கொழும்பு)

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் போக்குவரத்துப் பணிகளுக்காக, துணுக்காய்க்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான பேருந்து ஒன்று நேற்று முன்தினம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்புப் படையின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அத்துல ஜெயவர்த்தன மற்றும் துணுக்காய் பிரிவு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தப்பிரதேசங்களில் 8 ஆயிரம் பொது மக்கள் வரையில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

இதற்கிடையில், தற்போது மாங்குளம், முழங்காவில், அக்கராயன்குளம் மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களுக்கு 5 பேருந்து சேவைகள் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

### யாழ்.நகரில்

## புதிய சைக்கிள்களுக்கு தட்டுப்பாடு பழசுகளுக்கும் ஏக கிராக்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் தற்போது புதிதாக சைக்கிள்கள் கொள்முதல் செய்யமுடியாத அளவிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அநேகமாக பெரிய வியாபார நிலையங்களில் எல்லாம் அனைத்து சைக்கிள்களும் விற்றுத்தீர்ந்து விட்டன.

லுமாலா, ஹீரோ சைக்கிள்களுக்கு ஏக மவுசு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பெண்களுக்கான சைக்கிள்கள் இல்லை என்ற அளவில் காணப்படுகின்றது.

வன்னி நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் பெருமளவிலான மக்கள் பிரயாணத் தேவைக்காக சைக்கிளையே நாடுகின்றனர். அடுத்துவருகின்ற நாட்களில் புதியவற்றை கொள்முதல் செய்து தருவதாக தம்மிடம் வரும் வாடிக்கையாளர்களிடம் வியாபாரிகள் கூறிவருகின்றனர்.

இது இவ்வாறிருக்க மோட்டார் வண்டி பாவனையால் கேட்பாரின்றி வீட்டின் ஒதுக்குப்புறத்தில் கிடந்த பழைய சைக்கிள்கள் இப்போது ஏக கிராக்கியுடன் பாவனையாளர்களினால் விற்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவின் உப தலைவரும், யா/ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் அதிபருமான

திரு.சி.நாகையா

அதிபர் தரம் Iக்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
சண்டிலிப்பாய்ப் பிரிவு,
நிர்வாகமும் அங்கத்தவரும் தொண்டர்களும்.

(3935)



வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பிரிவிற்குட்பட்ட கேசாவில் பகுதியில் டெங்கு ஒழிப்புத் தொடர்பாக நடைபெற்ற விழிப்புணர்வுக்கருத்தரங்கை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆரம்பித்துவைத்து சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிவதையும், டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் சுகாதாரப் பிரிவினர் மற்றும் மக்கள் ஈடுபடுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

## சமாதான நீதவானாக நியமனம்



(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையைச் சேர்ந்த அன்டன் நிக்ஸன் பேபி நீதி மற்றும் மறு சீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்வியைக் கற்ற இவர் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். சிறந்த சமூக சேவையாளராக விளங்கும் இவர் 25 வருட காலமாக அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

நாவாந்துறை, கண்ணாபுரம் பகுதியில் தற்போது வசித்து வரும் அன்டன் நிக்ஸன் பேபிக்கு சமாதான நீதவான் நியமனம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சிபாரிசு செய்யப்பட்டு நீதி மற்றும் சட்ட மறு சீரமைப்பு பிரதி அமைச்சர் வீ. புத்திரசிகாமணியால் வழங்கப்பட்டது. (ந)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அதிவண கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளாரின் " இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மிஷன்" என்னும் நூல்வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.போதனா மருத்துவமனைக்கு முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிக் கற்கைப் பிரிவு மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை தென்னிந்திய திருச்சபையின் யாழ்.மாவட்ட பேராயர் அதிவண டி.எஸ். தியாகராஜா, வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா சிரியர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் வழங் கவுள்ளனர்.

மேலும் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக பதில்நூலகர் செல்வி எஸ்.அருளானந்தம் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## மகரஜோதி மண்டலப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபையினர் நடத்தும் மகரஜோதி மண்டலப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து 47 நாட்களுக்கு யாழ்.கந்தர்மடம் ஸ்ரீ செட்டிந்தாழ்வு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

விழாக்காலங்களில் தினமும் 11 மணி முதல் மணிகண்டப்பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூஜை, பஜனை, சத்தியமான பொன்னு 18 படிப்பூஜை, அன்னதானம் என்பன இடம்பெறும்.

ஜனவரிமாதம் 2ஆம் திகதி 47 ஆவது நாள் மண்டலப் பூர்த்தி விழா அன்று பிற்பகல் 2மணிக்கு மணிகண்டப் பெருமானுக்கு நெய் அபிஷேகம், விசேட திரவிய அபிஷேகம் ஹோமம், 108 கலசாபிஷேகம், தீபாராதனை ,1008 அர்ச்சனை வழிபாடுகளும், இந்திய சபரிமலை யாத்திரை செய்யும் சுவாமிமார்களுக்கு இருமுடிகட்டும், நெய்நிரப்பும் வைபவமும்,தொடர்ந்து 18 படிப்பூஜை, கறுப்பன் பூஜை, சக்திபூஜை என்பனவும் இடம் பெறவுள்ளதுடன் மறுநாள் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5மணிக்கு பூஜை,பஜனைகளுடன் இந்திய யாத்திரை ஆரம்பமாகும்.

தொடர்ந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெறவுள்ளது. (ஓ-9)

## டெங்கு ஒழிப்பு கருத்தரங்கும் செயற்றிட்டமும் மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை பொதுசுகாதாரப் பிரிவிற்குட்பட்ட கேசாவில் பிள்ளையார் கோவில் பகுதியில் டெங்குநோயாளர் இருவர் இனங்காணப்பட்ட நிலையில் அப்பகுதியில் டெங்கு ஒழிப்பு பிரச்சாரமும் டெங்கு ஒழிப்புச் செயற்திட்டமும் துரிதப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நேற்று யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் வண்ணார் பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவில் பகுதியில் சுகாதார அறிவூட்டற் கருத்தரங்கும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்ட ஆரம்ப வைபவமும் நடைபெற்றது.

• டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பிரதம பொதுச்சுகாதாரப் பரிசோதகர், பகுதி சுகாதாரப் பரிசோதகர் சுகாதார கல்வி அதிகாரி, சுகாதாரப் பரிசோதகர் சுகாதார கல்வி அதிகாரி, சுகாதாரப் பாதுகாவலர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், அப்பகுதி வாழ் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கருத்தரங்கின்போது அப் பகுதியில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகள் தொடர்பாக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின்பு மக்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு டெங்கு ஒழிப்பு தொர்பான வேலைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். (ஓ-14,7)

## கொக்குவில் பொது நூலக வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(யாழ்பபாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுநூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசு பெறுவோர் விபரம் ஒழுங்கு வரிசையில் தரப்படுகின்றது.

**பேச்சுப்போட்டி**

*தரம் 1-5*

வி.விதுஷா - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, ஆ.காயத்திரி -கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தி., ர.சிலோஜன் -கோ. இராமகிருஷ்ணா மகாவித்தி., ர.அருண்ராஜ் - திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

**கவிதைப் போட்டி**

*தரம் 6-8*

சி.பிரதீபன்- கோ.இராமகிருஷ்ணா வித்தி., உ.மாதவி, கு.ஜனனி-கொக்குவில் இந்துக் கல்லூரி.

*தரம் 9-11*

ஸ்ரீ.கீர்த்தனா , லோ.வேணிகா- கொக்குவில் இந்துக் கல்லூரி, ந.பவிதா- செங்குந்தா இந்துக் கல்லூரி.

*தரம் 12-13*

டோ.ஜெரோன்ராஜ் - செங்குந்தா இந்துக் கல்லூரி, செ.ராஜவதனி, சு.அபர்ணா - கொக்குவில் இந்துக்கல்லூரி

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

கு.ஜெரோதா -பெரியபுலம் மகாவித்தி., இ.அருள்ஜோதி - முத்துத்தம்பி மகாவித்தியாலம்.

**கட்டுரைப்போட்டி**

*தரம் 6-8*

இ.செந்தூரன் - இந்துக்கல்லூரி, பா.விசாகன் -செங்குந்தா இந்துக்கல்லூரி, செ.துர்க்கேஷன் -பெரியபுலம் மகாவித்தி.

*தரம் 9-11*

இ.பிரணவன்-இந்துக்கல்லூரி, ந.டுனேஷா, ப.சுவர்ணா - கொக்குவில் இந்துக் கல்லூரி.

*தரம் 12-13*

செ.கோபிகா - கொக்குவில் இந்துக் கல்லூரி,. ச.பிரசங்கா - செங்குந்தா இந்துக் கல்லூரி, வி.விஜயதர்சினி - திருநெல்வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலயம்.

**சிறுவர் பாடல்**

வை.காயத்திரி -ஞானக்குழந்தை இல்லம் திருநெல்வேலி, இ.தசிகா-மகிழ் முன்பள்ளிப் பூங்கா கொக்குவில், கொ.கிஷாந் - சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி கொக்குவில் மேற்கு, த.பாலகீர்த்தனா - மகிழ் முன்பள்ளிப் பூங்கா கொக்குவில், ர.துளசி - சங்கீதா முன்பள்ளி, கொக்குவில்.

**வாசிப்பு**

அ.ரட்ஷிகா -சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி , கொக்குவில் மேற்கு, நிருஷினி - ஸ்ரீ கணேசா முன்பள்ளி, கோண்டாவில், ந.இராகவன் - விக்கினேஸ்வரா ஞானக்குழந்தை, கோண்டாவில் மேற்கு, த. கேஜனா -சுப்பிரமணியம் மாலதி முன்பள்ளி, கொக்குவில் மேற்கு, அ.திவ்யன்- ஞானக்குழந்தை இல்லம், திருநெல்வேலி. (ஓ-7,14)

## தமிழ் மொழித்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் தமிழ் மொழித்தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆசிரியை திருமதி கௌரியம்மாள் மாணிக்கராஜா பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஓ-9)

## வெதுப்பக உற்பத்தி தொடர்பான இரண்டு நாள் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் விதாத வள நிலையத்தினர் வெதுப்பக உற்பத்திகள் தொடர்பான இரண்டு நாள் பயிற்சியினை எதிர்வரும் 27, 28 ஆகிய திகதிகளில் காலை 9 மணிக்கு நல்லூர் விதாத நிலையத்தில் நடாத்தவுள்ளனர்.

இப் பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ளவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ஓ-7, 14)




## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினால் நடத்தப்படும் மகளிர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரசாந்திக் கொடியேற்றம், ஓம்காரம், காயத்திரி ஜெபம், வேதபாராயணம், திருவிளக்குப்பூசை, அஷ்டோத்திரம், பஜனை மற்றும் யாழ். மருத்துவபீட மகப்பேற்று நிபுணர் டாக்டர் ஜி.பவானி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அத்துடன் பட்டிமன்றம், திருமதி பத்மதர்ஷினி ஸ்ரீராம் வழங்கும் வீணை இசை நிகழ்ச்சி ஆகியனவும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 84 ஆவது அவதார தின விழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 84 ஆவது அவதார தின விழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை யா்ழ்.இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நடை பெறவுள்ளது.

அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் காலை 8.30 இற்கு கொடியேற்றமும் தொடர்ந்து ஓம்காரம்,வேதபாராயணம், காயத்திரி ஜெபம், ஜோதி தியானம் ,நாம சங்கீர்த்தன, நாம ஜெபம் ஆகியவற்றுடன் இசைநிகழ்வுகள், பஜனை,சொற்பொழிவு, இசையும் கதையும்,நாடகம் எனப் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஓ-9)

# நாடும் மக்களும்

54

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

கலாநிதி
**தெ.வே.மகாலிங்கம்**

**மனமகிழ் மன்ற (பொழுது போக்குத் ) தொழிலாளர்கள்**

விஜயநகரப் பேரரசில் மக்களுடைய விளையாட்டுக்களும் பொழுதுபோக்குச் செயல்களும் மிக உற்சாகத்துடன் நடந்தன. அரசாங்கமும் பொது மக்களும் அவற்றிற்கு ஆதரவளித்தனர். மல்யுத்தம், குத்துச் சண்டை, சேவல் போட்டி, பொம்மலாட்டம் முதலியன அக்காலத்தில் நடைபெற்றன. விஜயநகர அரண்மனையில் ஆயிரம் மல்லர்களுக்கு மேல் இருந்தனர்.தங்களுடைய கைகளில் வட்ட வடிவமான ஓர் ஆயுதத்தைக் கொண்டு ஒருவரையொருவர் குத்திக் கொண்டுஅரசருடைய முன்னிலையில் மல்யுத் தம் செய்தனர். மல்யுத்தத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு ஓர்பட்டு வேஷ்டி இனாம் கொடுக்கப் பெற்றது. மல்யுத்தம் நடக்கும் பொழுது முறைப்படி போரிடவும், வெற்றி பெற்றது இன்னவர் என்று நடு நிலைமை தவறாது நிச்சயிக்கவும் மல்லர்களுக்குள் நடுவர்கள் இருந்தனர். "மல்யுத்தம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்களும் அக்காலத்தில் இருந்தனர். இம் மல்லர்களுக்கு போட்டிஏற்பட்டால், மற்போரின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும், அரசனுடைய சம்மதத்தோடும், குறிப்பிட்ட தினத்தில், இன்னவை என்று வரையறை செய்ய பெற்ற ஆயுதங்களோடு மற்போர் செய்வது வழக்கம்.

மல்லர்கள் இடுப்பில் கச்சையணிந்து மற்போர் நடக்கும் இடத்திற்கு முகமலர்ச்சியோடு செல்வது வழக்கம். அரசர்கள், பிரபுக்கள் முன்னிலையில் தெய்வ வணக்கம் செய்து பின்னர் மற்போரைத் தொடங்குவர். மல்லர்கள் போரிடும் பொழுது அவர்களுடன் கூட நிற்கும் துணைவர்கள் தவிர வேறு ஒருவரும் பேச்சுக்கொடுக்கக் கூடாது.

இம் மாதிரிச் சண்டைகள் சர்வசாதாரணமான விஷயம். இதில் நாள்தோறும் பல மல்லர்கள் அடிபட்டு இறந்து விடுவதும் உண்டு " என்று பாப்போசா என்பார் கூறியுள்ளார். அக்காலத்தில் பொதுமக்கள் விரும்பிய பொம்மலாட்டமும் அடிக்கடி நடப்பதுண்டு. சேவல்களைப் பழக்கி சேவற்போர் நடத்தி அதனால் பிழைப்பு நடத்தியவர்களும் இருந்தனர்.பருந்து, இராசாளி முதலிய பறவைகளின் உதவியினால் யானைகளையும் கரடிகளையும் வேட்டையாடுவதும் உண்டு. நாடோடிகளும் தொழுதுண்டு பிழைப்பவர்களும் இருந்தனர்.

விஜயநகர மன்னர்களும் பிரபுக்களும் செல்வச் செழிப்பினால் பெருமிதமிக்க ஆடம்பர வாழ்வு வாழ்ந்தனர். அரண்மனையிலும் அந்தப்புரத்திலும் பிரபுக்களுடைய வீடுகளிலும்குற்றேவல்களைப் புரிவதற்குப் பலர் ஏவலாளர்களாகவே நியமிக்கப் பெற்றனர். பிரபுக்கள் தங்களுடைய வருமானத்திற்கு ஏற்றாற் போல பணியாட்களை அமர்த்திக் கொண்டனர்.

அரண்மனையிலும் அரசவையிலும் குற்றேவல் புரிந்த பணியாட்களைப் பற்றி அந்நிய நாட்டு வழிப் போக்கர்கள் கூறியுள்ளனர். பேரரசர்கள் நாடு காணச்சென்றால் அவர்களைப் பின் தொடர்ந்து தொண்டர்களின் சேனையொன்றும் குதிரைப் படை யும் செல்வது வழக்கம். அரண்மனையில் தனியிடமான அந்தப்புரங்களில் அரசிகளும் அரசிளங் குமரிகளும் வாழ்ந்தனர். ஒவ்வொரு அரசிக்கும் தனி வீடும், அடியோர் பங்கும் ஆயமும் (ஏவலாளர்கள்) காவர்காரர்களும் இருந்தனர். "விஜயநகர மன்னர் ஒருவருக்கு 12 ஆயிரம் மனைவிகள் இருந்ததாகவும், அவர்களுள் நான்காயிரம் பேர் அரசன் எங்கு சென்றாலும் கால்நடையாகவே சென்று சமையல் செய்வது வழக்கம் என்று நிக்கோலோ காண்டி கூறுவர். முக்கிய அரசிகள் பல்லக்கில் செல்வது வழக்கம். இன்னும் சிலர் குதிரைகளின் மீதும் செல்வதுண்டு. அரசருடன் பல்லக்குகளில் சென்ற அரசிகளில் பலர். அரசன் இறந்துவிட்டால் உடன் கட்டை ஏறித் தங்களை மாய்த்துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. இரண்டாம் தேவராயர் காலத்தில் அந்தப்புரத்தில் எழுநூற்றுக்கும் மேற்பட்ட அரசிகளும் ஆசை நாயகிகளும் இருந்தனர் என அப்துர் ரசாக் கூறியுள்ளார்.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் பன்னிரண்டா யிரம் பேர் இருந்தனரென்றும் பீயஸ் கூறுவர். அச்சுத தேவராயர் காலத்தில் நான்காயிரம் பணிப் பெண் கள் அந்தப்புரத்தில் இருந்ததாக நூனிஸ் கூறியுள்ளார் .இப் பணிப்பெண்கள் அரசி களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பல்லக்கில் சுமந்துசென்றனர். பல பணிப் பெண்கள் மல் யுத்தம் செய்வதிலும், வருங்காலத்தைப் பற்றிச் சோதிடம் சொல்லுவதிலும்இசை பாடுவதிலும் வல்லவர்களாக இருந்தனர். பலர், வாளும் கேடயமும் கொண்டு போர் செய்வதற்குப் பலவிதமான தோல் கருவிகளையும், துளைக் கருவிகளையும் கொண்டு இசை பாடவும் தெரியும் என்று பீயஸ் கூறியுள்ளார். மகாநவமி திருவிழாவில் இந்தப் பணிப்பெண்கள் சிறந்த சேவைகளைச் செய்தனர்.

அடிமைகள்

விஜயநகர ஆட்சிக்காலத்தில் சிலர் அடிமைகளாக வாழ்ந்தனர் , என்பதற்கும், அடிமை வியாபாரம் நடைபெற்றதற்கும் சான்றுகள் உள்ளன. கிராமப்புறங்களில் உழவுத் தொழிலிலும் நகர்ப்புறங்களிலும் அடிமைகள் எஜமானனுடைய நிலங்களில் உழவு வேலை பார்த்தனர்.

நகரங்களில் குற்றேவல்களைப் புரிந்தனர். தென்னிந்தியாவில் அடிமைத் தன்மை நிலை பெற்றிருந்தாக அப்துர் ரசாக் நிகோலா -டி -காண்டி, பார்போசா என்பவர்கள் கூறியுள்ளனர்.பீதார் (Bidar) நகரத்தில் கருமை நிறம் பொருந்திய மக்களை விலைக்கு விற்பதும் வாங்குவதும் நடைபெற்றது. போர்த்துக்கீசியர்களும் அடிமைகளை தங்கள் வேலைக்கு அமர்த்திக் கொண்டிருந்தனர். அடிமைச்சந்தைகளில் ஆடு மாடுகளைப் போல் மக்கள் விலை போயினர் என்று லின்ஸ்சோடனும் (Linschoten) கோவா நகரத்தில் பெரும்பான்மையான மக்கள் அடிமைகளாக இருந்தனர் என்று பீட்ரோ டெல்லா வாலி(Petra Dilla Valle) என்பாரும் கூறியுள்ளனர். 1470 ஆம்ஆண்டில் பொறிக்கப் பெற்ற சாசனம் ஒன்றில் அடிமைகளைப்பற்றியும் மற்றொரு கல்வெட்டில் பெண்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர் என்றும், வீரபணாஜியர் என்பர்களுக்கு ஹோலியர்கள் அடிமைத் தொழில் செய்தனர் என்றும் தெரிகிறது.

பலமுறைகளில் அடிமை வியாபாரம் நடைபெற்றது.சிலகுடுமபத்தினர் தங்களை பரம்பரை அடிமைகளாக விற்றுக்கொள்வதுண்டு. அவர்கள் மற்ற அஃறிணைப் பொருட்கள் போல் வாங்கி விற்கப்பட்டனர்.வாங்கிய கடனைக்கொடுக்க முடியயாதவர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு அடிமைகளாயினர். உண்ண உணவும்உடுக்க உடையும் கிடைக்காத பஞ்சகாலங்களில் அடிமை வியாபாரம் அதிகரித்தது. சோழமண்டலக் கரையோரத்தில் கொடிய பஞ்சம் நேர்ந்த பொழுது மக்கள் உண வின்றி வாடிவதங்கினர்.தங்களுடைய குழந்தைகளை நான்கு அல்லது 5 பணம் ஆகிய சிறிய தொகைக்கு விற்றனர். அப்பொழுது மலையாள நாட்டில் இருந்து வந்த அடிமை வியாபாரிகள் அரிசி யையும் தேங்காய்களையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு கப்பல் நிறைய அடிமை களை ஏற்றிச் சென்றனர் என்று பார்போசா கூறியுள்ளார்.

1630இல் நிலவிய ஓர் கொடிய பஞ்சத்தில் தென்னிந்திய மக்கள் தங்களுடைய குழந்தைகளை 5 பணத்திற்கு பெறக்கூடிய அரிசியைப் பெற்றுக் கொண்டு விற்றனர். மலையாள நாட்டு அடிமை வியாபாரிகள் அக்குழந்தைகளைக் கொண்டுபோய் கிழக்கிந்திய தீவுகளில் ஈவிரக்கமின்றி விற்று பெரும் பொருள் பெற்றனர். (தொடரும்)

# இன்றைய தேசப்பற்றாவன் நாளை தேசத் துரோகியாக மாறக் கூடும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய தேசப் பற்றாளன் நாளை தேசத் துரோகியாக மாறக் கூடுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாதம் பல்வேறு வழிகளில் நாட்டிற்குள் ஊடறுக்கக்கூடும்.

எனவே மிகவும் விழிப்புடன் சகல தேச விரோத சக்திகளையும் தோற்கடிக்க வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசத் துரோகிகளிடம் இந்த நாட்டை ஒப்படைக்க மக்கள் விரும்புகிறார்களா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ஓ-6)

# சரத்பொன்சேகா அவமானப்படுத்தப்பட்ட சம்பவத்தை ஏற்க முடியாது

## தேசிய பிக்குகள் முன்னணி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா திட்டமிட்ட வகையில் அவமானப்படுத்தப்பட்ட சம்பவத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

அண்மையில் களனிப்பிரதேசத்தில் வைத்து ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு எதிராக கூக்குரல் எழுப்பப்பட்டது.

இந்தச் சம்பவம் முழு இனத்திற்குமே ஏற்பட்ட அவமானமாக கருதப்படவேண்டும் என தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வளவு சேவை ஆற்றியிருந்த போதிலும் கட்டளைகளுக்கு அடிபணியாதவர்களுக்கு இவ்வாறான ஓர் கதியே ஏற்படும் என்பதனையே சரத்பொன்சேகாவின் விவாகாரம் எடுத்தியம்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# பெற்றோலியம் , மின்சக்தி, நீர், துறைமுகம் ஆகிய துறைகள்

## அத்தியாவசிய சேவைகளாக அறிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலங்கை மின்சார சபை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் துறைமுகம் ஆகிய துறைகள் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வருகையில் குறித்த துறைகளை அரசாங்கம் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்துள்ளது.


குறித்த துறைகளை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சட்டப்படி வேலை தொழிற்சங்கப் போராட்டத்திற்கு அரசாங்கம் உரிய மதிப்பளிக்கவில்லை என ஜே.வி.பி. தொழிற்சங்கத் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

எனவே கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் அடக்கு முறையின் மூலம் கட்டுப்படுத்த முனைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்காலத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகங்கள் இணைந்து முன்பள்ளி மாணவர்களிடையே நடத்திய போட்டிகள் நூலக மண்டபத்தில் நடைபெறுவதை காணலாம். (படம்:- சாவகச்சேரி நிருபர் )

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009 பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-II

ப.சண்முகம், சி.தினேஸ்
(ஆசிரியர்கள், வட்டு. மத்திய கல்லூரி)

### பகுதி - B

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01)

$$A = \begin{pmatrix} 3 & 1 \\ -1 & 2 \end{pmatrix} \quad B = \begin{pmatrix} -2 & -1 \\ 1 & -1 \end{pmatrix} \quad C = \begin{pmatrix} -1 & 2 \\ 0 & -3 \end{pmatrix}$$

ஆயின் பின்வரும் தாயங்களைக் காண்க,

i- 2c தாயத்தைக் காண்க?

ii- A+B தாயத்தைக் காண்க?

iii- மேலே (ii) பெறப்படும் தாயத்தின் சிறப்புப் பெயர் யாது?

iv- A - C தாயத்தைக் காண்க?

v- $\begin{pmatrix} X & -1 \\ -1 & Y \end{pmatrix} + C = A$ எனின் X, Y இன் பெறுமானம் யாது?

(02) நேர்விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டி,

i- AB = 6.5cm, $A\hat{B}C = 120^o$; BC = 4.5cm, AD = CD = 7cm ஆகுமாறு நாற்பக்கல் ABCD ஐ வரைக.

ii- பக்கம் AB ஐ B யில் தொடத்தக்கதாகவும், பக்கம் BC ஐ நாணாகவும் உடைய் ஒரு வட்டத்தை வரைந்து மையம் O வைக் குறித்துக் காட்டுக.

iii- வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக?

iv- மேற்படி வட்டத்திற்கு A யிலிருந்து இன்னொரு தொடலி வரைந்து AD எனக் குறித்துக் காட்டுக?

v- தொடலி AP ஐ வரைவதற்கு நீர் பயன்படுத்திய தேற்றத்தைச் சுருக்கமாக எழுதுக?

(03)

(a)- ஓர் கூட்டல் விருத்தியின் nஆவது உறுப்பு Tn = 5 - 3n எனின்,

i- முதலாம் உறுப்பு, பொது வித்தியாசம் என்பனவற்றைக் காண்க.

ii- 15 ஆவது உறுப்பைக் காண்க?

iii- (n - 1) ஆவது உறுப்பைக் காண்க?

iv- முதல் 15 உறுப்புகளின் கூட்டுத்தொகை யாது?

(b) பெருக்கல் விருத்தி ஒன்றின் முதலாம், இரண்டாம் உறுப்புகளின் கூட்டுத்தொகை 12 உம். மூன்றாம், நான்காம் உறுப்புகளின் கூட்டுத்தொகை 48 உம் ஆகும். இவ்வாறான இரு விருத்திகள் உண்டெனக் காட்டி அவற்றின் முதல் நான்கு உறுப்புகள் கொண்டஇரண்டு தொடர்களையும் எழுதுக?

(04) ரூபா 50,000 பெறுமதியுடைய தொலைக்காட்சிப் பெட்டியை உடன் கொடுப்பனவாக ரூபா 20,000 செலுத்தியும் எஞ்சிய தொகையை வட்டியுடன் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ரூபா 1,310 ஐக் கொண்ட 30 சம மாதக் கட்டணங்களாகச் செலுத்த முடியும்,

i- செலுத்த வேண்டிய எஞ்சிய தொகை யாது?

ii- செலுத்திய மொத்த வட்டி யாது?

iii- ஒரு மாதக் கடன் தொகைக்கான வட்டி யாது?

iv- ஒரு மாதக் கடன் தொகை யாது?

v- செலுத்தப்படும் வருட வட்டி வீதத்தைக் காண்க?

(05)

(a) நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலையை கூறி, அதனை நிறுவுக.

(b) ABCD ஓர் இணைகரமாகும். E, F, G என்பன முறையே பக்கங்கள் DC, AD, BC ஆகியவற்றின் நடுப்புள்ளிகளாகும். கோடுகள் AE யும், FG யும் M இல் வெட்டுகின்றன.

i- FM // DE.

ii- 3DE = 2MG என நிறுவுக?

(06) பேருந்தொன்றில் 03 ஆண்களும், 02 பெண்களும் நின்றபடி உள்ளனர். ஆசனங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன. அடுத்த பேருந்து தரிப்பிடத்தில் அமர்ந்திருந்த இருவர் இறங்க காலியாக உள்ள ஆசனத்தில் நின்று கொண்டிருந்தவர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருந்தனர்.

i- நின்று கொண்டிருந்தவர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருப்பதற்கான மாதிரி வெளியை வரைக?

ii- இரண்டு ஆசனங்களிலும் ஆண்களிருப்பதற்கான நிகழ்தகவு யாது?

iii- இரண்டு ஆசனங்களிலும் பெண்கள் இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

iv- குறைந்தது ஒரு ஆசனத்திலாவது பெண்ணொருவர் இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

# இன்று ஒரு தகவல்

## சுதேசி சிந்தனை

ஒரு சமயம் மகாத்மா காந்தி காசிக்குச் சென்றிருந்தார். அங்கே அவர் மதன்மோகன் மாளவியாவைச் சந்தித்து இங்கிலாந்து ராணியிடமிருந்து எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு என்னை அழைத்திருக்கிறார்கள். ஆனால் அதில் கலந்து கொள்வதற்குச் சில நிபந்தனைகள் விதித்திருக்கிறார்கள். அதாவது ராணியாரைப் பார்க்க வருபவர்கள் பாண்ட், கோட், சூட், ரை, தொப்பி, ஷூ எல்லாம் போட்டுக் கொண்டு தான் வர வேண்டும். ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும் இது தான் நிபந்தனை.

இந்த நிபந்தனையை நான் ஏற்க முடியாது. அதனால் இங்கிலாந்து ராணியின் அழைப்பை நிராகரிப்பது என்று முடிவு செய்திருக்கிறேன்'' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் மாளவியா, ''எனக்கும் கூட இங்கிலாந்து ராணியிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. நான் அதில் கலந்து கொள்வதாகச் சொல்லி பதில் எழுதியிருக்கிறேன்'' என்றார்.

மாளவியா இப்படிக் கூறியதைக் கேட்டதும் காந்திஜி மிகவும் ஆச்சரியப்பட்டார்.

ஏனென்றால், மாளவியா காந்திஜியை விட தீவிரமாக சுதேசி சிந்தனை உள்ளவர்.

காசியில் ஹிந்து பல்கலைக்கழகத்தை உருவாக்கி இந்திய கலாசாரம் பற்றியெல்லாம் போதித்தவர். அப்படிப்பட்டவர் எப்படி இங்கிலாந்து ராணியின் அழைப்பை ஏற்றுக் கொண்டார் என்று காந்திஜி யோசித்துக் கொண்டிருந்த போதே மாளவியா தான் அனுப்பியிருந்த பதில் கடிதத்தின் நகலை காந்திஜியிடம் கொடுத்து, ''இதைப் படித்துப் பாருங்கள்'' என்றார்.

காந்திஜி அந்தக் கடிதத்தை வாங்கிப் படித்தார். அதில் என்ன எழுதியிருந்தது தெரியுமா?

''நான் தங்களின் அழைப்பை ஏற்று வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்கிறேன். ஆனால் நான் இந்தியாவில் பிறந்து வளர்ந்ததால், எனக்குப் பழக்கமான உடை அணிந்து தான் வருவேன். ஏனென்றால், நான் இந்த நாட்டின் பிரதிநிதியாகத்தான் அந்த மாநாட்டில் கலந்து கொள்கிறேன். அதனால் என் நாட்டு உடையில் தான் நான் வரவேண்டியிருக்கிறது.

ராணியார் பல மொழிபெயர்ப்பாளர்களை அமர்த்திக் கொள்ளும் வசதி படைத்தவர். அதனால் என் நாட்டு மக்கள் சார்பாக நான் பேசும் மொழியை மொழி பெயர்க்க நீங்கள் ஏற்பாடு செய்ய முடியும்.

ராணியின் மாளிகையில் என்னுடைய சௌகரியத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்வது மிகவும் சுலபம் என்று நினைக்கிறேன். நான் தினமும் கங்கை நீரில் தான் குளிக்கிறேன். கங்கை நீரைத்தான் குடிக்கிறேன். அதனால் ராணியாரின் விருந்தினராக நான் அங்கு இருக்கும் வரையில் எனக்கு இந்த வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்'' என்று இங்கிலாந்து ராணிக்கு மாளவியா கடிதம் எழுதியிருந்தார்.

வட்ட மேசை மாநாடு நடந்தது.

அதில் காந்திஜியும், மாளவியும் சுதேசி உடையிலேயே கலந்து கொண்டார்கள்.

அது மட்டுமல்ல.

வட்டமேசை மாநாடு நடந்த அந்த 7 நாட்களும் அவர்கள் விரும்பிய படியே இந்தியாவிலிருந்து கங்கை நீரை எடுத்துக் கொண்டு போய்க் கொடுப்பதற்கும் இங்கிலாந்து ராணி ஏற்பாடு செய்திருந்தாராம்.

சுதேசிக் கொள்கையில் காந்திஜியும், மாளவியாவும் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார்கள் பார்த்தீர்களா?.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வலய மட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாம கல்வி வலய விசேட கல்வி அலகினால் மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விசேட பாடசாலையைச் சேர்ந்த மாற்று ஆற்றலுள்ளோருக்கிடையில் நடத்தப்பட்ட வலயமட்ட போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பேச்சு**

க. பிரகான் (வாழ்வகம்), சி. தர்சன் (நவீல்ட் பாடசாலை).

**தனிஇசை**

கு. ஜெகதீசன் (வாழ்வகம்), செ. சோதிப் பெருமாள் (நவீல்ட் பாடசாலை)

**குழு இசை**

வாழ்வகம்

**தனி நடனம்**

ஜெ. ஜஸ்ரிகா (நவீல்ட் பாடசாலை), எஸ். வாசினி (வாழ்வகம்).

**தனிநடனம் I**

எம். அருண் (சிவபூமி), எஸ். சண்முகப்பிரியன், எம். றொபெக்சினி (ஆர்க்பாடசாலை).

**தனி நடனம் II**

சி. பிந்துஜன் (ஆர்க் பாடசாலை), போ. போல்டனீசியஸ் (சிவபூமி).

**குழு நடனம் I**

ஆர்க் பாடசாலை, சிவபூமி.

**குழு நடனம் II**

ஆர்க் பாடசாலை, சிவபூமி.

**குழுநடனம் திறந்த போட்டி**

இருபாடசாலைகளும் முதலிடம் - வாழ்வகம், நவீல்ட் பாடசாலை

**நாடகம் திறந்த போட்டி**

நவீல்ட் பாடசாலை, ஆர்க் பாடசாலை, மூன்றாமிடம் இரு பாடசாலை - வாழ்வகம், சிவபூமி. (ஓ)

# ஓ.எல். மாணவர்களுக்கான அழகியல் பாட முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலய மட்டத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான சித்திரம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான அழகியல் பாடமுகாம் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் நாளை புதன்கிழமைநல்லூர், யாழ்ப்பாணக்கோட்ட மாணவர்களுக்கான சித்திரபாடமுகாம் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் சங்கீத பாடமுகாம் வேம்படி மகளிர் கல்லூரியிலும், நாளை மறுதினம் வியாழக்கிழமை கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கான சித்திரபாட முகாம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், சங்கீத பாடமுகாம் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

இப்பாட முகாமிற்கு குறித்த பாட மாணவர்களை பங்குபற்ற செய்யுமாறு யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் யாழ்ப்பாணம் ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய திட்ட உத்தியோகத்தர் எஸ். பாலச்சந்திரன் உரையாற்றுவதையும் சிறுவர்களது நாடகத்தின் ஒரு காட்சியினையும் படங்களில் காணலாம்.

# இராசி பலன்

17.11.2009
(கார்த்திகை 01, செவ்வாய்க்கிழமை)
பிரதமை பின்னிரவு 1.37 மணி வரை
விசாகம் காலை 6.51 மணிவரை
இராகுகாலம்-3.08- 4.38 மணி வரை
சுபநேரம்-10.38- 12.08 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், போசன சுகம், உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| இடபம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், தெய்வ தரிசனம், தொழில் நன்மை. |
| மிதுனம் | பணவருவாய், செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, செல்வாக்கு. |
| கடகம் | அதிக பிரயாசை, உடல் நலக் குறைவு, பணவிரயம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | மனச்சஞ்சலம், சுபசெலவு, புதிய விடயம், ஆரோக்கியக்குறைவு. |
| கன்னி | வாக்கு மேன்மை, தன்னம்பிக்கை, புதிய பொருள் சேர்க்கை, உறவினர் சந்திப்பு. |
| துலாம் | குடும்பக் கவலை, விவாதம், வீண் செலவு, காரிய தாமதம். |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, கடின முயற்சி, சயன சுகம், விருந்துபசாரம். |
| தனுசு | அமைதிக்குறைவு, திடீர்பயணம், சயன சுகக்குறைவு, வீண்பகை. |
| மகரம் | காரிய அனுகூலம், மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| கும்பம் | நண்பர்கள் உதவி, சுபநிகழ்வு, இனிய தகவல், தொழில் நன்மை. |
| மீனம் | அச்சமான நிலை, புதிய முயற்சி, ரோகநிலை, கட்டுப்பாடு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 60 |
| தக்காளி | 75 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 15 | 30 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 80 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 120 | 40 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 100 |
| கீரை – 1 பிடி | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 170 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# கார்த்திகை மாதப் பலன்கள்



## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் வரை)

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது காரிய வெற்றி ஏற்படும் என்றே சொல்ல வேண்டும். மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் செவ்வாய் நீசம் பெறுகிறார். அதைப் பார்க்கும் குருவும் நீசம் பெற்றுள்ளார்.

எனவே நீசனை நீச்சன் பார்த்தால் நினைத்ததை முடிப்பான் என்பது பழமொழி. நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்யும் விதத்தில் கிரகங்கள் சாதகமாக விளங்குகின்றன.

புத - ஆதித்ய யோகமும் , சந்திர , செவ்வாய் பரிவர்த்தனையும் இம்மாதம் புதிய வாய்ப்புகளை கொண்டு வந்து சேர்க்கும். மாதக் கடைசியில் தான் குரு பெயர்ச்சியாகப் போகிறார். இதுவரை மகரத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் இனி கும்பத்தில் சஞ்சரித்து உங்கள் குழப்பங்களுக்கு எல்லாம் விடை கொடுக்கப் போகிறார். இதுவரை ஏற்பட்ட இழப்புகளை எல்லாம் ஈடுசெய்யப் போகிறார்.

வளர்ப்பு புதல்வராக இருந்தாலும் வாய்த்த புதல்வராக இருந்தாலும் உங்கள் குண மறிந்து நடந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கம் இனி மாறும். ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் இராகுவும் மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் வியத்தகு மாற்றங்களை உங்களுக்கு வழங்குவார்கள். அதன் 3 மற்றும் 11 ஆம் பார்வை பலத்தால் ஆன்மீக நம்பிக்கை அதிகரிக்கும். அடுத்தவர்களின் ஆலோசனையின் பெயரில் செய்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்வதோடு சனிக்குரிய வழிபாட்டையும் ஆலயத்திற்குச் சென்று செய்து வந்தால் நாளும் பொழுதும் நன்மைகளை வரவழைத்துக்கொள்ளலாம்.

நவம்பர் 27 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு 3ஆம் இடம் மற்றும் 6ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுதுதொழில் முன்னேற்றம் கூடும். தொகை எதிர்பார்த்தபடி வந்து சேரும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் வந்து சேரலாம். வீடு வாங்குவோர் எந்த திசையில் கதவு இருந்தால் இலக்குமி உள்ளே வர ஏதுவாக இருக்கும் என்பதை சுயஜாதக ரீதியாக ஆராய்ந்து வாங்குவது நல்லது. வாகனம் வாங்குபவர்களும் வளர்ச்சி தரும் எண் எது என்பதை அறிந்து வாங்குவது நல்லது.

நவம்பர் 28ஆம் திகதி விருட்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். தன ஸ்தானத்திற்கும் களத்திர ஸ்தானத்திற்கும் அதிபதியான சுக்ரன் எட்டில் மறையும் பொழுது குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்லும் சூழ்நிலை உருவாகும். எந்த முடிபு எடுத்தாலும் குடும்பத்தில் உள்ளவர்களை கலந்து ஆலோசித்துச் செயல்பட்டால் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். பழைய ஆபரணங்களைக் கொடுத்து விட்டு புதிய ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

டிசம்பர் 15 ஆம் திகதி கும்ப ராசியில் குரு அடியெடுத்து வைக்கப்போகிறார். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்துவார். சுப நிகழ்ச்சிகளை இல்லத்தில் உருவாக்குவார். பெயர்ச்சிக்கு முன்னதாகவே குருவை வழிபட்டு குதூகலத்தை வரவழைத்துக்கொள்ளுங்கள்.

இம்மாதம் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் குருவால் முன்னதாகவே நன்மைகள் கிடைக்க குரு தெட்சினா மூர்த்தியை வழிபட்டு வாருங்கள்.



## இடபம்

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் , 1, 2 பாதங்கள் வரை

**நல்ல காரியங்களை முன் நின்று நடத்தி உள்ளம் மகிழும் இடப ராசி நேயர்களே!**

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது விரயாதிபதி நீச்சம் பெற்று வியாழனால் பார்க்கப்படுவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும் மாதமாக அமையப் போகிறது. அஷ்டமத்தில் உள்ள இராகு சிந்தனைகளை திசை திருப்பும். அடுத்து வரும் குருப்பெயர்ச்சி பதவியில் மாற்றங்களை உருவாக்கும். இருந்தாலும் நீங்கள் கவலைப்படத் தேவை இல்லை.

உங்கள் இராசியில் தான் சந்திரன் உச்சம் பெறுகிறார். எனவே சிந்தனா சக்தி அதிகம் கொண்டவர்கள் நீங்கள். சிந்தித்து எடுக்கும் முடிபுகளால் சிறப்பைப் பெறுவீர்கள். வந்து துயர் அலைமோதாமல் இருக்க வழிபாடுகள் உங்களுக்கு கைகொடுக்கும் நந்தி வழிபாட்டை பிரதோஷ நாளில் மேற்கொண்டால் வந்த இடர்பாடுகள் வாயிலோடு நின்று விடும். அது மட்டுமல்லீ தற்சமயம் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இராகு இரண்டில் சஞ்சரிக்கும் கேது இவற்றால் மன அமைதி குறைவு ஏற்படாமல் இருக்கவும் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து கொள்வது நல்லது.

ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். அலுவலகப் பணிகளில் சில எதிர்ப்புகளைத் தேடிக் கொள்வீர்கள். பிறர் பொருளை பாதுகாப்பதில் கூடுதல் கவனம் தேவை. தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். பொதுவாக பொறுமையோடு செயல்பட வேண்டிய மாதமாகும். நவம்பர் 27ஆம் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 2 , 5 க்கு அதிபதியான புதன் 8இல் சஞ்சரிக்கும் பொழுது இல்லத்தில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. குடும்ப உறுப்பினர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கும். அவர்களின் கல்விக்காகவும் கடல் தாண்டும் முயற்சிக்காகவும் நீங்கள் வழிகாட்டுவீர்கள். வந்த வரன்கள் விட்டுப்போனாலும் புதிய வரன்கள் வந்து சேரலாம். பூர்வீக சொத்துக்களில் இதுவரை தெரியாமல் இருந்த இடம் இப்பொழுது தெரிந்து அதை விற்பனைக்கு கொண்டு வரும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கோவில் திருப்பணிகள் செய்ய முன் வருவீர்கள் .வேலைப் பளு அதிகரிக்கும். வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவானாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்வீர்களா?

**சிவல்புரி சிங்காரம்**

என்பது சந்தேகம்தான். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

நவம்பர் 28 ஆம் திகதி விருட்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும் . விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். ஆடை ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

பத்தில் வந்த குரு பதவி மாற்றத்தை உருவாக்கலாம் வரும் மாற்றம் நல்ல மாற்றமாக அமைய வருங்காலத்திற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி காணவும் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வதோடு குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குரு ஹோமங்களில் கலந்து கொண்டு குருவருளை முழுமையாகப் பெறுவது நல்லது. இம்மாதம் பத்தாமிடத்திற்கு வரும் குரு வால் முத்தான பலன் கிடைக்க செல்வம் தரும் தென்முகக் கடவுளை வழிபட்டு வாருங்கள். (தொடரும்)

# வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நேரடியாக நிவாரணம் வழங்கத் திட்டம்

## சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

இலங்கையின் ஒருமைப்பாடு இறையாண் .ஸ்மக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இலங்கை மக்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகை யில் வடக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக் காக தனது சேவையை வழங்கப் போவதாக ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

இந்த மக்கள் வசிக்கும் முகாம்களுக்கு செல்ல இடமளித்தாலோ இடமளிக்காவிட்டாலோ அரசாங்கத்துடன் மோதல்களில் ஈடுபடுவதைவிட அந்த மக்களுக்கு ஏதேனும் ஒன்றை செய்யவேண்டும் என்பதே தனது அடிப்படை நோக்கம் எனவும் பிரேமதாஸ கூறியுள்ளார்.

குணசிங்கபுர சுசரித்தயில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நிகழ்ச்சித்திட்டம் குறித்து ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இந்த ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது.

தான் ஐக்கிய தேசியக் கட்சியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் வர்ண முத்திரையைக் குத்திக்கொள்வதிலிருந்து விலகியிருப்பதாகவும் இந்த மக்களின் பிரச்சினையை அரசியல் கால்பந்தாக மாற்றிக் கொள்ளும் எந்த எண்ணமும் தனக்கு இல்லையெனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து அரசியல் துறையிலும் இராஜதந்திரத் துறையிலும் பல மாதங்களாக பேசப்பட்டு வருகிறது. இந்த விடயத்தை கோஷங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும், பேச்சுவார்த்தைகளுக்கும் மட்டுப்படுத்தாது பயனளிக்கக்கூடிய வகையில் நேரடியாக மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே தமது அபிவிருத்தித்திட்டத்தின் அடிப்படை நோக்கம் எனவும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# பல்கலைக்கழக மாணவியை உடன் விடுதலை செய்க

## அ.இ.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் எனக் கூறி தமிழ் மாணவர்களை கைது செய்வதை அனுமதிக்க முடியாது. எனவே பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட பேராதனை பல்கலைக்கழக கலைப் பிட மாணவி இராசையா துவாராகவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

பெற்றோர் அகதி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு சிறையில் துவாரகா தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவ்வாறான ஒரு சூழலில் அப் பாவித் தமிழ் மாணவர்களுக்கு எப்போது நீதி கிடைக்கும் எனவும் ஒன்றியம் கேள்வியெழுப்பியுள்ளது.

அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் விஷேட செய்தியாளர் மாநாடு மருதானை சி.எஸ்.ஆர்.மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஒன்றியத்தின் சார்பில் இங்கு உரையாற்றிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரத்தின மேலும் கூறுகையில்,

பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவு மாணவியான இராசையா துவாரகா கைது செய்யப்பட்டமை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல பல்கலைக்கழக விரிவுரை கூடத்தில் இருந்து வெளியே வரும்போது இவர் திடீரென கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கோ விரிவுரையாளர்களுக்கோ தெரியாமலேயே இருந்தது. பேராதனை பொலிஸாருக்குக் கூட இக் கைது தொடர்பில் உடனடியாக எதுவுமே தெரியவரவில்லை. நாம் மேற்கொண்ட முயற்சியை அடுத்து துவாரகா பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்தது.

இவரை பார்வையிட பெற்றோர்களைத் தவிர வேறு யாரையும் அனுமதிக்க முடியாது என பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தெரிவித்தமையால் எம்மால் அவரைப் பார்க்க முடியாமல் போனது.

ஆனால் இம் மாணவியின் பெற்றோர் மற்றும் தம்பி தங்கை என எல்லோருமே இடம் பெயர்ந்து தற்போது அகதி முகாம்களில் உள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் துவாரகா அநாதரவாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பயற்கரவாதம் முழுமையாக தோற்கடிக் கப்பட்டுள்ளமையால் மாணவி துவாரகாவை கால தாமதம் இன்றி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோருகின்றோம் என்றார். (ஓ-6)

# மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை

## மீண்டும் இராணுவ சேவையில்

ஊழல் மோசடி குற்றச் சாட்டுக்களின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கியிருந்த மேஜர் ஜெனரல் பராக்கிராம பன்னிப்பிட்டியவை அந்தக் குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்து அவரை கடந்த வியாழக்கிழமை முதல் உடனடியாக அமுழுக்கு வரும் வகையில் மீண்டும் இராணுவ சேவையில் இணைக்க பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த சில தினங்களுக்குள் தன்னைக் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாக நியமிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உறுதியளித்திருப்பதாக நியமனக் கடித்தைப் பெற்றுக்கொண்ட பன்னிபிட்டிய தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார்.

இதன் பின்னர் தனக்கெதிராக வழக்கு தாக்கல் செய்த ஜெனரல் பொன்சேகாவிற்கு நல்ல பாடத்தைக் கற்பிக்கப் போவதாகவும் பன்னிப்பிட்டிய கூறியுள்ளார். (ஓ-6)

# "INNOMECH" புத்தாக்கப் போட்டி -2009

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுள் முதலிடத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் நாடளாவிய ரீதியில் நடாத்தும் INNOMECH- 2009 என்ற புத்தகக் கண்காட்சிப் போட்டி எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ். மத்திய கல்லூரியில் நடை பெறவுள்ளது. இப்புத்தகக் கண்காட்சிப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் மாணவர் பிரிவிலும் ஏனையோர் திறந்த பிரிவிலும் வயது வேறுபாடின்றி பங்குபற்றலாம்.

இப் போட்டியில் ஏற்கனவே வெவ்வேறு போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற, வெற்றி பெறாத புத்தாக்கங்களும் பங்குபற்றலாம் .இது பற்றிய அறிவித்தல்களும் விண்ணப்பப் படிவங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் கிடைக்கப்பெறாத மாணவர்களும் தனியார்களும் யாழ். பல்க்லைக்கழக பௌதிகவியற்றுறை அலுவலகத்திலோ அல்லது போட்டிப் பொறுப்பாளரிடம் நேரடியாகவோ பெற்று நாளை மாறு நாள் வியாழக்கிழமைக்கு முன்னர் விண் ணப்பிக்கலாம் என்று இப்போட்டிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி நா. சிவயோகன் அறிவித்துள்ளார். (ஓ)

# விற்றமின்களின் அவசியமும் அவற்றின் குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகளும்



குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருடைய உடல் வளர்ச்சிக்கும் சமச்சீரான விற்றமின்கள் தேவை. இந்த விற்றமின்கள் நிறைந்த உணவை சரியாக எடுத்துக் கொள்ளாவிட்டால் உடல் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும். நோய்களும் சொல்லாமல் கொள்ளாமல் வந்து ஒட்டிக் கொள்ளும்.

அதனால் என்ன விற்றமின் குறைந்தால் என்ன நோய்வரும், எவற்றில் அந்த விற்றமின்கள் உள்ளன என்பது பற்றி பார்ப்போம்.

**விற்றமின் 'ஏ'** : இதுகுறைந்தால் கண் பார்வை மங்கும். நோய் எதிர்ப்பு சக்தி குறையும். கருப்பையில் கரு வளர்வதற்கும், பிறந்த குழந்தை ஆரோக்கியமாக வளரவும் இந்த விற்றமின் தேவை. எலும்புகளும் பற்களும் வளர இதுதான் முக்கிய காரணம்.

முருங்கைக் கீரை, பச்சைக் காய்கறிகள், வெண்ணெய், முட்டையின் மஞ்சள் கரு, ஈரல், மீன் எண்ணெய் ஆகியவற்றில் விற்றமின் 'ஏ' அதிகம் காணப்படுகிறது.

**விற்றமின் 'பி'** : இது குறைந்தால் வயிற்று மந்தமும், அஜீரணமும், இரத்த சோகையும் ஏற்படலாம். பக்கவாதம், இதய பாதிப்பு ஏற்படவும் சாத்தியக் கூறுகள் அதிகம். அத்துடன், வாயில் புண் உண்டாகும்.

கைக்குத்தல் அரிசி, இறைச்சி, முட்டை, காய்கறிகள் ஆகியவற்றில் இந்த விற்றமின் அதிகம் உள்ளது.

**விற்றமின் 'சி'** : இது குறைந்தவர்கள் மன அமைதி இழப்பர். மேலும் தோற்றத்தில் சிடுமூஞ்சியாக காணப்படுவர். எலும்புகள் பலம் குறையக்கூடும். பல் ஈறு வீங்கி பற்கள் ஆட்டம் காணலாம். பல் ஈறுகளில் இரத்தம் கசியும். தோலில் இரத்தப் போக்கு ஏற்படும்.

தோடம்பழம், திராட்சை, சமைக்காத பச்சைக் காய்கறிகள், நெல்லிக்காய், எலுமிச்சை, தக்காளி, கொய்யா, உருளை, வெற்றிலை, பப்பாளி ஆகியவற்றில் விற்றமின் சி அதிகம் உள்ளது.

**விற்றமின் 'டி'** : விற்றமின் 'டி' இல்லாவிட்டால் எலும்புகள் வலுவிழந்து விடும். பற்கள் கெடக்கூடும்., விற்றமின் 'டி' போதிய அளவு இல்லாத குழந்தைகளின் கால்கள் வில் போல் வளைந்து விடும். வயிறு ஊதும்.

போதுமான சூரிய வெளிச்சம், குழந்தைக்குக் கிடைத்தால் அதன் உடலே விற்றமின் 'டி' தயாரித்துக் கொள்ளும். முட்டை, மீன், வெண்ணெய் ஆகியவற்றிலும் விற்றமின் 'டி' அதிகம் உள்ளது.

**விற்றமின் 'ஈ'** : இது குறைந்தால் தசைகள் பலவீனமடையும். மலட்டுத்தன்மையும் உண்டாக்கும்.

கோதுமை, கீரை, பச்சைக் காய்கறிகளை அதிகம் சேர்த்தால் விற்றமின் 'ஈ' சமச்சீர் விகிதத்தில் கிடைக்கும்.

## உடல் நலக் குறிப்புகள்

- உணவுப் பொருட்களை பல்வேறு வகைகளில் சமைத்துச் சாப்பிடுகிறோம். ஆனால் எல்லாவற்றிலும் பொருட்களை ஆவியில் வேகவைத்துச் சாப்பிடும் முறைதான் நல்லது.
- மனித உடலில் உள்ள யூரிக் அமிலம் கெட்டியாவதால் தான் சிறுநீரகத்தில் சிறு கற்கள் உருவாகின்றன. இவ் அமிலம் கெட்டியாகாமல் இருக்க வேண்டுமானால் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.

  குறைவாகத் தண்ணீரைக் குடிப்பவர்களுக்கு பெரும்பாலும் சிறுநீரகக் கல் உற்பத்தியாகும்.
- மீனிலுள்ள ஓமேகா - 3 என்ற பொருள் சருமக் கலங்களை புதுப்பிக்கும். சருமத்தை பளபளக்க செய்யும். வாரத்துக்கு 3 நாள் மீன் சாப்பிடுவது நல்லது. மீன் சாப்பிடாதவர்கள் மீனெண்ணெய் மாத்திரை சாப்பிடலாம்.
- அதிகமான கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை உண்பதை பெரும்பாலும் தவிர்க்க வேண்டும்.
- நாம் எப்போதும் ஒரே சோப்பை பயன்படுத்த வேண்டும்.

  ஆனால் உணவு எண்ணெயை அவ்வப்போது மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

# மழைக்காலத்திலும் ஜொலிக்க...



மழைக்காலம் தொடங்கிவிட்டது. எப்போதும் "நசநச" வென மழை பெய்து கொண்டே இருக்கிறது. இந்தக் காலத்தில் பலரும் சளி பிடித்து அவதிப்படுவர். வீதிகளில் தேங்கியிருக்கும் தண்ணீரில் நடப்பவர்களுக்கு சேற்றுப்புண் வர வாய்ப்புள்ளது. எனவே மழைக்காலத்தில் உடலை எப்படிப் பராமரிப்பது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

மழை பெய்யும் காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தலைக்குக் குளித்தால் போதுமானது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும். குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணெயை தடவிக் கொள்ளவும். அதேபோல் முழங்காலில் இருந்து கணுக்கால் வரை தேவையற்ற முடிகளை அகற்றும் கிரீமைத் தடவி மசாஜ் செய்தால் அந்த இடங்களில் பூஞ்சையின் தாக்குதல் இருக்காது.

தினமும் இரவு படுக்கப்போகும் முன்பு ஒருதட்டில் சிறிது வெந்நீரை ஊற்றி அதில் உங்கள் பாதங்களை 5 நிமிடங்கள் ஊற வைத்து கை விரல்களால் மசாஜ் செய்யுங்கள். இப்படிச் செய்வதால் உடல் முழுவதும் உள்ள இறுக்கம் விடுபட்டது போல் இருக்கும். வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்கு வரும் போது சுத்தமான தண்ணீரால் கால்களை நன்கு கழுவி சுத்தமான துணியால் ஈரத்தைத் துடையுங்கள்.

குளிக்கும் நீரில் ஒருகைப்பிடி அளவு வேப்பிலை போட்டு வைத்திருந்து சிறிது நேரம் கழித்துக் குளிக்கலாம். பெண்கள் மழை நாட்களில் தவறாமல் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஏனெனில் கிருமிநாசினியான மஞ்சள் சருமத்தைப் பாதுகாக்கும்.

ஈரமான துணிகளை அணிந்து கொள்வதால் தோல் எரிச்சல் பூஞ்சைப் பாதிப்புப் போன்றவை ஏற்படலாம். எனவே ஈரத் துணியைக்கழற்றியவுடன்அந்த இடத்தில் தேங்காய் எண்ணெய் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவிவிடலாம்.




# அடிக்கடி ஏற்படும் நோய்களும் அவற்றுக்கான தீர்வுகளும்



☼ சிறிது தண்ணீரில் ஒரு கரண்டி ஓமம் போட்டு கொதிக்க வைத்து அதில் 100 மில்லி தேங்காய் எண்ணெயை விட்டு மீண்டும் கொதிக்க விட்டு வடிகட்டி கொள்ளுங்கள். வடிகட்டியதோடு கற்பூரப் பொடியைக் கலந்து இளஞ்சூட்டுடன் இடுப்பில் நன்றாகத் தேய்த்து வர இடுப்பு வலி நீங்கும்.

☼ வெண்டைக்காய் விதையைக் கொஞ்சம் பார்லி கஞ்சியில் போட்டு காய்ச்சி மூன்று நாள்வரை சாப்பிட்டு வந்தால் சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சல் இல்லாமல் போகும்.

☼ உணவு சாப்பிடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாக தினசரி அரை தேக்கரண்டி ஒலிவ் எண்ணெயைச் சாப்பிட்டு வந்தால் இரத்தக் குழாயில் கொழுப்பு படியாமல் தடுக்கலாம்.

☼ வாய்ப்புண் உள்ளவர்களுக்கு காரம் என்றால் ஆகாது. அதனால் முடிந்த வரை காரத்தைக் குறைத்துச் சாப்பிடுங்கள். தேங்காய்த் துண்டுகளைச் சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் எளிதில் ஆறும்.

☼ ஜாதிக்காயைச் சிறு சிறு துண்டுகளாகச் சீவி அதை நெய்விட்டு வறுத்து சாப்பிட்டு வந்தால் சீதபேதி குணமாகும். இந்த பாதிப்பு உள்ளவர்கள் தயிர், மோர், இளநீர் ஆகியவற்றை அதிகம் உட்கொள்வது நல்லது.

☼ துளசி மனித மூளைக்கு வலிமையைக் கொடுக்கக் கூடியது. அதற்கு துளசி இலையை ஒரு டம்ளரில் பறித்துப் போட்டு ஊறவைத்து அந்த நீரைக் குடித்து வந்தால் மூளை பலம் பெறும்.

☼ தொண்டைப் புண் பாதிப்பு குணமான பிறகு கொஞ்சம் மிளகைத் தூளாக இடித்து அதில் வெல்லம், நெய் கலந்து உருட்டி விழுங்கி வந்தால் அந்த பாதிப்பு முற்றிலும் குணமாகும்.

☼ அஜீரணம் மற்றும் மந்தத்திற்குச் சிறந்தது கொய்யாவின் கொழுந்து இலை. அதனை சாப்பிட்ட உடனேயே பலனை எதிர்பார்க்கலாம்.

# கர்ப்பிணிப் பெண்களுக்கு...



கர்ப்பமுற்றுள்ள பெண்களும், குழந்தை பெற்றுள்ள தாய்மார்களும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய உள்ளன. அவையாவன,

☞ ஊட்டச்சத்துள்ள, திட்ட உணவு உட்கொள்ள பல்வேறு உணவு வகைகளைத் தேர்வு செய்தல்.

☞ கர்ப்பகாலம் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் காலங்களில் கூடுதல் உணவும் அதிக கவனமும் தேவை.

☞ பிறந்த குழந்தைக்கு 4-6 மாதத்திற்கு தாய்ப்பால் மிகவும் அவசியம். இரண்டு ஆண்டுகள் வரை தாய்ப்பால் கொடுக்கலாம்.

☞ குழந்தைக்கு திட உணவுகளை 4-6 மாதத்தில் இருந்து கொடுக்க வேண்டும்.

☞ குழந்தைகளும், விடலைப் பருவத்தினரும் நல்ல உடல் நலனைப் பெறவும் நோய்களை எதிர்க்கவும், போதுமான அளவு ஊட்ட உணவு உட்கொள்ளவும்.

☞ கீரைகள், காய்கறிகள் மற்றும் பழங்களை அதிக அளவில் சேர்த்துக் கொள்ளவும்.

# உணவில் இருக்கும் கொழுப்புச்சத்து

கொழுப்புச் சத்தும் என்றதும் அது ஏதோ உடலுக்கு ஆகாத ஒன்று என்று எண்ண வேண்டாம். எதுவுமே அதிகமாகும் போதுதான் தீமையளிக்கிறது.

கொழுப்பு மற்றும் எண்ணெய்களில் அதிக அளவு சக்தி உள்ளது. இந்த சக்திதான் நாம் ஒரு செயலை செய்ய உதவி செய்கிறது.

கொழுப்பில் கரையக்கூடிய விற்றமின் கொழுப்பில் உள்ள கொழுப்பு அமிலங்கள் மூலம் உட்கிரகித்தல் திறனை அதிகப்படுத்துகிறது.

உடலுக்குத் தேவையான செயலாக்கப் பொருட்கள் உருவாக்கத்திற்கு கொழுப்பு பயன்படுகிறது. ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு 300 மில்லி கிராம் கொழுப்பு சத்துத் தேவைப்படுகிறது.

அதிக அளவு கலோரிகள் உள்ள கொழுப்பு உணவுகள் இரத்தத்தில் கொழுப்பை அதிகரிக்கிறது.

அதிக கொழுப்புச் சத்துள்ள உணவை உண்ணும் பொழுது உடல் பருமனாவதோடு இருதய நோய்கள், பக்கவாதம் மற்றும் புற்று நோய்களை எற்படுத்துகிறது.

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 1 விதி எண் : 7

### உடலமைப்பு

பிறந்த எண் 1, விதி எண் 7 ஆகக் கொண்டவர்கள் கேது, சூரியன் ஆகிய இருவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். இவர்கள் உயரமாகவும், கம்பீரத் தோற்றமுள்ளவராகவும் பிறர் கவனத்தை ஈர்க்க வல்லவராகவும் இருப்பர். எப்போதும் சுத்தமான ஆடையுடன் தோற்றமளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்களிடம் சிந்திக்கும் ஆற்றலும், கற்பனை வளமும் மிகுந்திருக்கும். இவர்கள் கண்டிப்புடன் பேசுவர். இவர்களின் பேச்சு பிறர் மனத்தை அச்சுறுத்துவதாக இருக்கும். அதனால் யாருமே இவர்களை நெருங்கத் தயங்குவார். அதனால் உற்றார் உறவினர்களுடன் அதிகம் தொடர்பு இருக்காது, நண்பர்களும் குறைவாகவே இருப்பர்.

இவர்கள் தன்னைப்போல பிறரும் இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவர். அது மட்டுமின்றி இவர்கள் பிறரை எதிலும் நம்பமாட்டார்கள். இவர்கள் ஒரு சமயம் அதிகமாக பிறருடன் கலந்து உரையாடுவர், வேறு சமயம் மௌனமாக இருந்துவிடுவர். அதைப் போன்று சில நேரங்களில் மகிழ்ச்சியுடன் சிரித்துக் காணப்படுவர். மறுசமயம் சோகமே உருவெடுத்தவர் போல காணப்படுவர். எந்த நேரத்தில் எப்படி இருப்பார்கள் என்று நிச்சயமாக கூற முடியாது.

நீதி நேர்மைக்குக் கட்டுப்பட்டவர்கள், உண்மைக்குப் புறம்பான எந்தச் செயலிலும் ஈடுபட மாட்டார்கள். இவர்களுக்குத் தெரிந்து யாராவது தவறு செய்தாலும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். சுட்டிக் காட்டிக் கண்டிப்பர். அவர்களுக்கு அறிவுரை கூறுவர்.

தன்னைப் புகழ்பவர்களைக் கண்டு மயங்கமாட்டார்கள். வீண் புகழ்ச்சிக்கு மசியாதவர்கள். தம் இன, மதத்தில் அதிகப் பற்றுள்ளவராகவும், அதற்காகச் சேவை புரியத் தயாராகவும் இருப்பர்.

இவர்கள் தன் பிரச்சினைகளையும் வேதனைகளையம் வெளிக் காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

### குடும்ப வாழ்க்கை

இவர்கள் தனக்கென்று ஒரு வழியைப் பின்பற்றுவர். பழைய சம்பிரதாயங்களில் நம்பிக்கை மிகக் கொண்டவர்களாகவும், அதைத் தம்மைப் போல பிறரும் பின்பற்ற வேண்டுமென்று எதிர்பார்ப்பவராகவும் இருப்பர். அதனால் குடும்பத்தில் இவர்கள் எதிர்பார்த்த பலன் இருக்காது. அதனால் குடும்ப வாழ்க்கை சோபிக்காது போய்விடும்.

மற்றவர்களை அனுசரித்து நடக்கும் சமயோசித புத்தி இவர்களிடம் இருப்பதில்லை. அதனால் மனைவி மக்கள் மட்டுமின்றி உற்றார் உறவினர் கூட இவர்களுடன் சுமூகமாகப் பேசமாட்டார்கள். பல நேரங்களில் வீண் கவலைக்கு ஆளாவர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் நெருப்பும், உலோகமும் சம்பந்தப்பட்ட தொழில்களில் மேன்மை அடைவார்கள். பலவகை உலோகப் பாத்திரங்கள், வண்டி வாகனங்கள் தயாரித்தல் அல்லது விற்பனை செய்தல் போன்ற துறைகளில் சிறந்திருப்பர், கமிஷன் ஏஜண்டாகவும் கூட இருக்கக்கூடும். இது தொடர்பான இடங்களில் பணி புரியவும் செய்வர்.

இவர்கள் செய்யும் தொழிலால் இவர்களை விட, பிறரே அதிகமாகப் பயன்பெறுவர். அரசுப் பணிகளில் இருந்தாலும், தொழில் புரிபவராக இருந்தாலும் இவர்கள் நேர்மையைக் கடைப்பிடிக்கக் கூடியவர்களாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்கள் தம் மனத்தில் வேண்டாத பலவற்றிற்காகக் குழப்பிக் கொள்வர். அதனால் சித்தப்பிரமை ஏற்படவும் கூடும். தீ விபத்து, வண்டி வாகனங்களினால் விபத்து போன்றவை ஏற்பட்டு தொல்லைகளும் நேரும். அத்துடன் உஷ்ணம் மற்றும் நீர் சம்பந்தமான வியாதிகள் ஏற்படக்கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்ட 1, சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 தொடர்புடைய விஸ்தார எண்களில் யோகப் பலன் தரும் எண்களுக்கு பெயரை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். இவர்களுக்கு 2 ஆம் எண்ணும் யோகமானது.

தம் நிறுவனங்களுக்குக் கூட 1,6 தொடர்புடைய யோக பலன் தரவல்ல எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம். இவ்விரண்டிலும் பெயர் வைப்பது சிரமமாக இருந்தால், 2 ஆதார எண் வருவனவற்றில் யோகமான விஸ்தார எண்ணுக்கு வைக்கலாம்.

இவர்களுக்கு 1,2,6 தொடர்புடைய எண்கள்ும், திகதியும் யோகமானவை.

ஆனால் 8,9 ஆகிய எண்களும், அவற்றின் தொடர்புடைய எண்களும், திகதிகளும் யோகமற்றவை.

## உடல் எண் : 1 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 1, விதி எண் 8 ஆகப் பிறந்தவர் சூரியன் சனியின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் நடுத்தர உயரமானவர்களாக இருப்பர். ஒரு சிலர் உயரம் குறைந்தும் காணப்படுவர். உடல் பலம்மிக்கவர்கள்.

### மன, குணவியல்பு

இவர்கள் எதையும் துணிந்து செய்யும் ஆற்றல் பெற்றவர்களாகி இருப்பர். எந்த ஒரு செயலையும் கண்ணும் கருத்துமாக செய்வர். தனக்கு வெற்றி ஏற்படும் வரை உணவு, உறக்கம் போன்ற எதையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பர். இவர்கள் சோர்வின்றி உழைப்பர். தய்வு, தாட்சண்யம் பார்க்க மாட்டார்கள்.

இவர்கள் சாதுபோல காணப்பட்டாலும் சில நேரங்களில் மூர்க்கத்தனமாக நடந்து கொள்வர். அதனால் பிறர் இவரை நெருங்க அஞ்சுவர். இவர்கள் சொன்ன வார்த்தைப்படி நடப்பர். சொன்னதை நிறைவேற்றும் போது அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் கொஞ்சமும் பொருட்படுத்தமாட்டார்கள். இவர்கள் எந்தத் தடைகளையும் கண்டு பின்னடையமாட்டார்கள். எதிர்த்துப் போராடி வெற்றி பெறும் ஆற்றல் மிக்கவர்.

இவர்கள் தங்களின் உண்மையான நிலையை வெளிப்படுத்தமாட்டார்கள். இவர்களிடம் எவ்வளவு பணம், சொத்து இருக்கிறது என்பதை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது. அந்த அளவுக்கு மர்மமானவர்கள்.

இவர்கள் சிக்கனம் என்று கூறுவார்களே தவிர, செலவு செய்வதில் தாராளமாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் ஆரம்ப வாழ்க்கை சோதனையும் வேதனையும் நிறைந்ததாக இருந்தாலும், பிற்காலத்தில் மகிழ்ச்சிகரமாக வீடு, நிலம், சொத்து சேர்க்கையுடன் இருப்பர். ஆனால் இவர்களுக்கு வாய்க்கும் மனைவி ஏட்டிக்குப் போட்டியாகவே இருப்பாள். அதனால் குடும்ப வாழ்க்கையில் அமைதி இருப்பது கடினம். தனிமை விரும்பியாக இருப்பர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் நெருப்பு, இரும்பு தொடர்புடைய தொழில்களில் சிறந்திடுவர். வண்டி வாகனம், வீடு நிலம் போன்றவற்றை வாங்கி விற்கும் ஏஜென்சிகளாக தொடர்பான அரசு மற்றும் தனியார் முறைகளில் பணிபுரிபவராக இருப்பர்.

இவர்கள் செய்யும் தொழிலில் பெருமளவு பணம் சம்பாதிப்பவராக இருப்பர்.

இவர்களின் பிற்கால வாழ்க்கையில் பொருளாதாரச் செழிப்பும் சொத்துச் சேர்க்கையும் பெற்றிருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண மிகுதியால் மூலம், வயிற்றுக் கோளாறு, மலச்சிக்கல் போன்றன ஏற்படும். வாயு சம்பந்தமான தொல்லையும், முதுகு வலியும் ஏற்படும்.

### சாதக பாதக எண்களும், திகதியும்

இவர்கள் சூரியன், புதன், சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 1,5,6 ஆகியவற்றில் யோகமான விஸ்தார எண்ணுக்கு தன் பெயரை மாற்றிக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக் கூட 1,5,6 தொடர்புடைய யோகமான பலன் தரும் விஸ்தார எண்ணுக்குப் பெயர் அமைப்பது சிறந்தது.

இவர்களுக்கு 1,5,6 தொடர்பான எண்களும், அது தொடர்பான திகதிகளும் யோகமானவை.

ஆனால் இவர்கள் சனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட 8 தொடர்புடைய எண்களையும், திகதியையும் தவிர்ப்பது நல்லது. (தொடரும்)

---

# இலங்கைக்கு அதிகளவில் உதவிகளை வழங்க வேண்டுமென ஹோம்ஸிடம் கோருவோம்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க



(கொழும்பு)

மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு அதிகமான உதவிகளை வழங்க வேண்டும் என்று இலங்கைக்கு இவ்வாரம் விஜயம் செய்யவுள்ள மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸிடம் தெரிவிப்போம் என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அரசாங்கம் செய்து கொடுத்துள்ள வசதிகள் மீள் குடியேற்ற வேலைத்திட்டம் மற்றும் நிலக் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை ஜோன் ஹோம்ஸ் பார்வையிடுவார்.

அண்மைக் காலமாக அரசாங்கம் மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்தியுள்ளமை தொடர்பில் ஜோன் ஹோம்ஸுக்கு விரிவாக விளக்கமளிக்கப்படும்.

மேலும் மீள்குடியேற்ற வேலைத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐ.நாவின் பிரதிநிதிக்கு விரிவாக விளக்கமளிக்கப்படும்.

மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஐக்கிய நாடுகள் சபையிடம் அதிகமான உதவிகளை எதிர்பார்க்கின்றோம் என்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகத்திடம் தெரிவிக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை இவ்வாரம் இலங்கை வரவுள்ள ஜோன் ஹோம்ஸ் அரச உயர் மட்டத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

மேலும் வவுனியா நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்யவுள்ள ஜோன் ஹோம்ஸ் அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுவார் என அரசாங்க மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

---

# புலிகளை அரசியல் ரீதியாக தோற்கடிக்க இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம்

## கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக தோற்கடிப்பதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் சுமூகமான உறவுகளைப் பேண வேண்டியது மிகவும் முக்கியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை தகர்ப்பதற்கும் இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை படையினர் இராணுவ ரீதியாக தோற்கடித்துள்ள போதிலும் உலக நாடுகளில் புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்கின்றது. சில ஆயுதப் போராளிகள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அனுதாபம் கொண்ட பாரிய சர்வதேச வலையமைப்பொன்று இயங்கி வருகிறது எனச் சுட்டிக் காட்டிய கோத்தபாய ராஜபக்ஷ கடந்த நான்கு வருடங்களில் இந்தியாவுடனான உறவுகளில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச நாடுகளினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை சமாளிப்பதற்கு இந்தியா பாரியளவு ஒத்துழைப்பு வழங்கியதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

---

# அம்பாறை சிவில் பாதுகாப்பு முகாமில் குண்டுவெடிப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிவில் பாதுகாப்பு படைப்பிரிவு முகாமில் குண்டு வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக கிழக்க மாகாணப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஐ.எம். கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த சம்பவத்தில் கைக்குண்டு ஒன்றே வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# 130 இலங்கைத் தமிழ் அகதிகளை நாடு கடத்த இந்தோனேஷியா முடிவு

மேற்கு யாவாவில் கப்பலில் தவித்தபடியிருக்கும் 250ற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்களில் 130 பேரை நாடு கடத்த இந்தோனோசியா திட்டமிட்டுள்ளது.

இந்தத் தமிழர்களின் செய்தித் தொடர்பாளர் போல செயற்படும் அலெக்ஸ் என்பவரையும் நாடுகடத்தப் போவதாக இந்தோனேசியா கூறுகிறது. மலேசியாவிலிருந்து சிறிய கப்பல் மூலம் 255 தமிழர்கள் அவுஸ்திரேலியா நோக்கி சென்ற போது, இந்தோனேசிய கடற்படை தனது கடல் எல்லைக்குள் வைத்து அவர்களை மடக்கியது.

பின்னர் அவர்களை மேற்கு யாவாத்தீவுக்குக் கொண்டு சென்றது. அன்று முதல் அவர்கள் கப்பலிலேயேயுள்ளனர். புகலிடம் குறித்த உறுதிமொழி அளிக்கப்படும் வரை கப்பலை விட்டு இறங்கமாட்டோம். மீறி வெளியேற்ற முயன்றால் மொத்தமாகத் தற்கொலை செய்துகொள்வோம் என அவர்கள் கூறி வருகின்றனர்.

இதனால் இழுபறி நிலை நீடித்து வருகின்றது. இந்தத் தமிழர்களின் செய்தித் தொடர்பாளராக அலெக்ஸ் என்பவர் செயற்பட்டு வருகின்றார். ஆனால் அவர் ஆள் கடத்தலை மேற்கொள்பவர் என்று இலங்கை கூறி வருகின்றது.

இந்த நிலையில் கப்பலை விட்டு இறங்க மறுக்கும் 130 தமிழர்களை வலுக்கட்டாயமாகப் போர்க் கப்பலுக்கு ஏற்றி அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க இந்தோனிஷியா திட்டமிட்டுள்ளதாம்.

இதனால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து இந்தோனேஷிய பொலிஸ் அதிகாரி பசிதார் தம்புனான் கூறுகையில், கப்பலில் இருப்பவர்கள் அவர்களது நாட்டுக்கே அனுப்பி வைக்கப்படுவர் என்றார்.

இந்தோனேஷிய குடியேற்றப் பிரிவு அதிகாரி கடோட் சுப்ரதோ கூறுகையில், அவர்களை நாடு கடத்துவது குறித்து இந்தோனேஷிய வெளியுறவுத்துறை நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாகக் கூறினார்.

இது தொடர்பாக சிங்கப்பூரில் நடைபெறும் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்றுள்ள இந்தோனேஷிய, அவுஸ்திரேலிய தலைவர்கள் கூட்டத்தில் முடிபு செய்யப்படவுள்ளது.

கடைசியாக வெளியான தகவல்களின்படி ஐ.நா. வகுத்துள்ள அகதிகளுக்கான அடையாளங்கள் இல்லாதவர்களை கப்பலிலிருந்து அப்புறப்படுத்தி இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்க இந்தோனேஷியா முடிபு செய்துள்ளதாகத் தெரிகின்றது.

இதற்கிடையே அலெக்ஸ் கனடாவில் பல வருடம் வசித்து வந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. அங்கு அவர் ஆள் கடத்தல் தொடர்பாகச் சிக்கி கைதாகி சிறைவாசம் அனுபவித்தவர் என்றும் கூறப்படுகின்றது. அவரது உண்மையான பெயர் சஞ்சீவ் குகேந்திரராஜா என்று இலங்கை அரசு கூறுகின்றது. (ச-5)

# ஓய்வு பெறுபவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஓய்வு பெறும் படை உயரதிகாரிகளுக்கு அதிக பாதுகாப்புக்களை வழங்க முடியாது. அவர்களின் பதவி நிலையைப் பொறுத்தே பாதுகாப்புக்களின் தரம் அமையும் என பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முன்னாள் இராணுவத் தளபதியும் பாதுகாப்புத்துறை பிரதம அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக்களை அரசு பலமடங்கு குறைத்துள்ளது.

ஏறத்தாழ ஒரு பற்றலியன் (600) படையினரைக் கொண்ட அவரின் பாதுகாப்பு வியூகம் தற்போது ஒரு பிளட்டுன் (34) படையினரைக் கொண்டுள்ளதாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் அவரின் பாதுகாப்புக்கு 2 ஜீப் வண்டிகளும் ஒரு குண்டு துளைக்காத பி.எம்.டபிள்யூ. காரும் வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும் அதிக பாதுகாப்புக்கள் தேவையும் எனவும் பொன்சேகா முன்வைத்த கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

எந்தவொரு முக்கிய பிரமுகருக்கும் அவரின் பதவி நிலையைப் பொறுத்தே பாதுகாப்புக்கள் வழங்கப்படும். ஓய்வு பெறும் அதிகாரிகளுக்கு அதிக பாதுகாப்புக்களை வழங்க முடியாது. ஓய்வு பெறும் ஏனைய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பே பொன்சேகாவுக்கும் வழங்கப்படும் என பொன்சேகாவின் கோரிக்கை தொடர்பில் கருத்துக் கூறும் போது பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ச-5)

## கூட்டுப்படைகளின் பிரதானியாக ரொஷான்குணதிலக நியமனம்

(கொழும்பு)

விமானப்படைத் தளபதி ரொஷான் குணதிலகவை கூட்டுப்படைகளின் பிரதானியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கூட்டுப்படைகளின் பிரதானியாக கடமையாற்றிய ஜெனரல் சரத்பொன்சேகா தனது பதவியை உத்தியோக பூர்வமாக இராஜினாமா செய்ததையடுத்து ரொஷன்குணதில நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுப்படைகளின் பிரதானியாக கடமையாற்றும் அதே வேளை விமானப்படைத்தளபதியாகவும் ரொஷான் குணதில கடமையாற்றுவார் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஓ-6)

## பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதிய அங்குரார்ப்பணக் கூட்டம்

சங்கானைப் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் நன்மை கருதி ஏற்கனவே பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதிய சங்கத்தில் அங்கத்துவம் பெற்றவர்களுக்கும், புதிதாக இணைய விரும்புவர்களுக்குமான பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அனைத்து ஓய்வூதியர்களையும் தவறாது சமுகமளித்து செயற்குழு ஒன்றைத் தெரிவு செய்து பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் சங்கத்தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் கேட்டுக்கொள்கிறார். (ஓ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



எப்போதும் விரிந்து மலர்ந்துகொண்டே இருப்பது தான் வாழ்க்கையாகும். சுருங்கி விடுவது மரணம் தான் தன்னுடைய சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுய நலக்காரனுக்கு நகரத்திலும் கூட இடம் கிடைக்காது. தனக்கு ஆண்டவன் கொடுத்துள்ள அறிவாற்றலைப் பயன்படுத்தாமல், கண்மூடித்தனமாக நம்புகிறவனை மன்னிப்பதைவிட, தன்னுடைய பகுத்தறிவை முறையாகப் பயன் படுத்தி நம்பாமல் இருக்கும் ஒருவனைக் கடவுள் மன்னித்துவிடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நாம் பகுத்தறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புராதன நூல்களில் கூறப்பட்டிருக்கிற தீர்க்க தரிசிகள், பெரியோர்கள் ஆகியவர்களைக் குறித்த உண்மைகளை நமது பகுத்தறிவானது உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் போது அவர்களிடம் நாம் நம்பிக்கை வைக்கலாம்.

---

பணக்காரன் பிறக்கும் போது தங்கச் சங்கிலியுடன் பிறப்பதில்லை.

— றாசோ

வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் மேலோங்கும் பிரதேசவாத சலுகைகள்

ஈழத்தமிழ் இனம் எதனையும் சாதிக்க முடியாமல் போனமைக்கு அடிப்படைக்காரணம் தமிழினத்திற்குள் நிலவிய பிரதேசவாத மேலெழுகை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஈழத்தமிழர்களும், மலையகத் தமிழர்களும் ஒன்று சேர முடியாதளவுக்கு நிலைமை இருந்தது.

இதனால் மலையகத் தமிழர்கள் ஆட்சியாளர்களுடன் இணங்கிச் செல்லும் கட்டாயத்திற்கு ஆளானார்கள்.

அதேசமயம் மலையகத்தைச் சேர்ந்த சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களை அடிமைப்படுத்தியதில் வடபகுதி தமிழர்களுக்கு காத்திரமான பங்குண்டு.

கொத்தடிமைகளாக மலையகச்சிறுவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வீட்டு எஜமானின், எஜமாட்டியின் அதட்டல், வெருட்டல், அடிதடி இத்தனையையும் தாங்கிய அந்தப் பிஞ்சுகள் விட்ட கண்ணீர் எங்களை இன்றுவரை வருத்துகிறது–வாட்டுகிறது–வதைக்கிறது. தனிப்பட்ட ரீதியிலும் பாவபழிகள் சுமக்கப்படுகின்றன.

இவை ஒரு புறம், மறுபுறத்தில் வடக்குத் தமிழர்–கிழக்குத் தமிழர் என்ற பாகப்பிரிவினை மோசமாகத் தலை விரித்தாடியது.

இதிலும் வடபகுதி குறிப்பாக யாழ்ப்பாண தமிழரின் பங்கு முக்கிய இடத்தினை பெற்றிருந்தது.

மலையகம் – வடக்கு – கிழக்கு என்ற பிரிவினைக்கு அப்பால், வடக்கிலும் யாழ்ப்பாணத் தமிழ், வன்னித்தமிழ் என்ற பிரிவினை எங்கள் இனத்தை பலவீனப்படுத்தியது.

அந்தளவில் நின்றால் போதாதா? யாழ்ப்பாணத்திற்குள் தீவகம்–வடமராட்சி–தென்மராட்சி–வலிகாமம் என்ற பாகுபாட்டுப் பஞ்சாங்கம் எங்களை நாங்களே நாசப்படுத்துவதற்கு தாராளமாக உதவிற்று.

இவற்றின் காரணமாக யாழ்ப்பாணத் தமிழர்களுடன் சேர்ந்து எதுவும் செய்ய முடியாதென்ற நிலைக்கு மலையக மற்றும் கிழக்குத் தமிழர்களை ஆளாக்கியது. அதனால் அவர்கள் விழித்துக் கொண்டனர்.

ஆனால் நாங்கள் எங்களின் பழக்க தோசத்தை மாற்ற முடியாமல் யாழ்ப்பாணத்திற்குள் இருக்கக் கூடிய பிரதேச வாதத்தை தூக்கி நிறுத்தி வாழ்த்துக் கூறுகின்றோம்.

நிதி ஒதுக்கீடுகள் முதல் குச்சொழுங்கையில் ரியூப் லைட் மிளிர்வதுவரை எல்லாமே பிரதேச வாத ஒதுக்கீடுகளாக இருக்கின்றன. இன்னும் பல உண்டு.


தேவையாகின்–அதுபற்றி அறிய யாரேனும் ஆவல் படுவார்களாயின் தக்க சான்றுகளுடன் நீண்ட பட்டோலையை சமர்பிக்க முடியும்.

எதுவாயினும் பிரதேசவாத பாகுபாட்டில் – ஒதுக்கீட்டில் தீவகம் பாவப்பட்டிருப்பதற்கு பண்ணைப் பாலவீதி நல்ல சான்றாகும் எனக் கூறினால், அதற்கு காரைநகர்–பொன்னாலைப் பாலம் அந்தமாதிரித் திருத்தப்படுகிறது என்று நீங்கள் முணுமுணுப்பதும் அது காரைநகரின் தனிப்பெரும் செல்வாக்கு எனப் பதில் தருவதும் பொருத்துடையவையே.

# ஒரு கோடியில் பறக்கும் கார் அமெரிக்காவில் 2011இல் அறிமுகம்

(வோஷிங்டன்)

ஓடுவதுடன் வானில் பறக்கும் வசதி கொண்ட பறக்கும் கார் அமெரிக்காவில் 2011ஆம் ஆண்டில் அறிமுகமாகிறது.



அதன் விலை ரூபா ஒரு கோடி .

சாலையில் ஓடக்கூடிய அதேநேரத்தில் வானிலும் பறக்கும் வசதி கொண்ட காரை அமெரிக்க நிறுவனமான டெர்ராப்யூஜியா தயாரித்து வருகிறது. அதற்கு டிரான்சிஸன் ரோடபிள் ஏர்கிராப்ட் என்று பெயரிடப்பட்டுள்ளது.

அதன் மாதிரி வடிவம் தயாரிக்கப்பட்டு விட்டாலும் பல கட்ட சோதனைகள் நடந்து வருகின்றன. எனவே எல்லா சோதனைகளிலும் வெற்றி கிடைத்த பின் அமெரிக்க அரசின் அனுமதி பெற்றதும் 2011 இல் பறக்கும் கார் அறிமுகமாகவுள்ளது.

சிறிய ரக ஸ்போர்ட் ஏர்கிராப்ட் மொடலில் உள்ள பறக்கும் காரை அமெரிக்காவில் ஓட்ட விளையாட்டுக்கான விமான ஓட்டுநர் உரிமம் போதுமானது. சாலையில் ஓடும் போது அதன் இறக்கைகள் இருக்கும் இடம் தெரியாமல் மடிக்க முடியும். மீண்டும் வானில்பறக்கத்தயாராகும் போது 30 விநாடிகளுக்குள் இறக்கைகளை விரியச் செய்யலாம். பறக்கும் காராக இருந்தாலும் விமானக் கட்டுப்பாடு அறை அனுமதி பெற்று விமானம் நிலையத் தின் ஓடு பாதை வழியாகவே வானில் பறக்க அனுமதிக்கப்படும்.

எனவே விமான நிலையத்திற்கு சாலையில் சாதாரண கார் போல ஓட்டி வரலாம். பின் ஓடு பாதையில் இருந்து வானில் பறக்கலாம். செல்ல வேண்டிய இடத்தின் விமான நிலையத்தில் தரை இறங்கி மீண்டும் சாலையில் அவரவர் இடத்தை அடையலாம். விமானி தவிர ஒரு பயணி மட்டுமே இந்தக் காரில் பயணம் செய்ய முடியும். மோசமான வானிலையால் விமானங்கள் பறக்க முடியாத நேரத்திலும் இந்தக் காரில் பறக்கலாம். (ஓ-6)

# சோமாலியா கடற்கொள்ளையரிடம் இருந்து இந்தியர்கள் உட்பட 9 பேர் விடுதலை

(மோகதிசு)

சோமலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்ட மாலுமிகளில் இந்தியா மற்றும் பங்களாதேசைச் சேர்ந்த 9 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஆசிய நாடுகளுக்கு வரும் கப்பல்கள் அனைத்தும் ஏடன் வளைகுடா பகுதியை கடந்து இந்து மகா சமுத்திரத்திற்குள் நுழையும் இடத்தில் சோமாலியா இருக்கிறது.

அந்த நாட்டில் கடற்கொள்ளையர்களின் ஆதிக்கம் உள்ளது. எனவே அந்தப் பகுதியைக் கடக்கும் சரக்குக் கப்பல் மற்றும் மாலுமிகளை கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்று விடுகின்றனர்.

சரக்குக்கப்பல் முதலாளிகள் அல்லது அதில் உள்ள சரக்குகளுக்கு சொந்தக் காரர்களுடன் பேரம் பேசி பிணையைத் தொகையைப் பெற்ற பின்னரே கப்பல் மற்றும் மாலுமிகளை கொள்ளையர்கள் விடுவிக்கின்றனர்.

தற்போதைய நிலையில் குறைந்தது 13 கப்பல்களும் 230 க்கும் மேற்பட்ட மாலுமிகளும் சோமாலியா கடற்கொள்ளையரிடம் இருப்பதாகத் தெரிகிறது.

இந்த சூழ்நிலையில் இந்தியா பங்களாதேஷைச் சேர்ந்த 9 மாலுமிகளைச் கடற் கொள்ளையர்கள் விடுதலை செய்துள்ளனர். பந்த்லாந்து தீவு தலைநகரான கரோவ் என்ற நகரில் கடந்த சனிக்கிழமை அன்று அவர்களை விட்டுச்சென்றனர். பணம் பெற்றுக் கொண்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனரா? அவர்கள் எந்தக் கப்பலைச் சேர்ந்தவர்கள் ? போன்ற விபரங்கள் தெரியவில்லை.

கரோவ் நகருக்கு அவர்களைக் கொண்டு விடுவதற்காக ஒரு காரை கொள்ளையர்கள் வாடகைக்கு எடுத்து வந்தனர். அந்தக் காரின் சாரதி மூலமாகவே மாலுமிகள் விடுவிக்கப்பட்ட தகவல் தெரியவந்தது. அவர் தான் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த மாலுமிகள் என்றும் தெரிவித்தார்.

9பேரும் அங்குள்ள ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சொந்த ஊருக்கு திரும்பும் ஆவலில் உள்ள அவர்களிடம் ஒரு பைசாகூட பணம் இல்லை.

அதே நேரத்தில் அனைவருமே நல்ல உடல் நலத்துடன் உள்ளதாக அந்த சாரதி தெரிவித்தார். (ஓ-6)

# தமிழகத்தில் மழைக்கு 95 பேர் பலி

(சென்னை)

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் வடகிழக்கு பருவ மழை மீண்டும் தீவிரமடைந்துள்ளது. வெளுத்து வாங்கும் மழைக்கு பலியானோர் எண்ணிக்கை 95 ஆக உயர்ந்துள்ளது.

தமி ழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

வடகிழக்கு பருவழை மீண்டும் தீவிரமடைந்துள்ளதால் கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. சென்னையிலும் மாநிலத்தின் பல பகுதிகளிலும் கடந்த சனிக்கிழமை காலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரை அவ்வப்போது மழை பெய்து கொண்டிருந்தது. பல இடங்களில் கன மழை பெய்தது. சென்னை நகரில் ஞாயிறு காலை 8.30 மணிவரை 6 செ.மீ. மழை பெய்தது. வடகிழக்கு பருவ மழை தொடங்கியதிலிருந்து இது வரை நிகழ்ந்த மழை தொடர்பான பல் வேறு சம்பவங்களில் 95 பேர் பலியாகி யுள்ளனர்.

கடந்த சனி இரவிற்குப் பிறகு நடந்த சம்பவங்களில் மட்டும் 6 பேர் பலியாகியுள்ள னர். தர்மபுரி மாவட்டத்தில் பெய்த கன மழைக்கு சுவர் இடிந்து வீழ்ந்ததில் 3 குழந்தைகள் இறந்தன. (ஓ-6)

# இன்குபேர்ட்டர் இயங்காததால் 6 குழந்தைகள் இறந்த பரிதாபம்



ஆந்திர மாநில விஜயவாடவில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு சிகிச்சை அளிக்க தனிப்பிரிவு செயற்பட்டு வருகிறது. இங்குள்ள விடுதியில் அப்போது தான் பிறந்த குழந்தைகள் பலருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

குறைப்பிரசவத்தில் பிறந்த சில குழந்தைகள் இன்குபேர்ட்டர் கருவியில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 6 குழந்தைகள் திடீரென இறந்தனர். இங்குபேர்ட்டர் சரியாக இயங்காததாலும் ஒட்சிசன் கருவிகள் செயல்படாததாலும் குழந்தைகள் இறந்ததாக புகார் கூறப்பட்டது.

இதனால் குழந்தைகளின் உறவினர்கள் ஆத்திரம் அடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள். டாக்டர்களிடம் வாக்குவாதத்தி லும் ஈடுபட்டனர்.

டாக்டர்கள் கூறும் போது 6 குழந்தைகளின் இறப்புக்கு இன்குபேர்ட்டர் இயங்காதது காரணம் அல்ல. 3 குழந்தைகள் இயற்கையாக இறந்துள்ளனர். மற்றக் குழந்தைகளின் இறப்புப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்றனர்.

இந்த சம்பவத்தை அடுத்து மாவட்ட ஆட்சியாளர் பெயூஸ்குமார் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (ஓ-6)

# சபரி மலையில் பலத்த பாதுகாப்பு பக்தர்களின் இருமுடி கட்டுகள் ஸ்கான் மூலம் பரிசோதனை



(சபரிமலை)

சபரிமலை ஐயப்பன் கோவில் மண்டல பூஜைக்காக நேற்று முன்தினம் மாலை நடை திறக்கப்பட்டது.

வழக்கமாக கார்த்திகை முதலாம் திகதி மாலை அணிந்து 41 நாட்கள் விரதம் இருந்து பக்தர்கள் செல்வார்கள். இதனால் மண்டல பூசை நேரத்தில் கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம் திரளும். நெரிசலில் சிக்காமல் முன் கூட்டியே தரிசனம் செய்வதற்காக இப்போது பலர் முன் கூட்டியே விரதம் தொடங்கி விடுகிறார்கள்.

எனவே தான் முதல் நாளான நேற்று அதிக அளவில் பக்தர்கள் கூட்டத்தை பார்க்க முடிந்தது.

இந்த ஆண்டு சபரிமலையில் வழக்கத்தை வட கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சந்தேகப்படும் படியான பக்தர்களின் இருமுடி கட்டுகள் தோள் பைகள் ஆகியவற்றை ஸ்கேன் மூலம் பரிசோதிக்க ஏற்பாடு செய்துள்ளனர். சன்னிதானத்தின் வடக்கு வாசல் நடைப்பந்தல், பாண்டித்தாவளம், பம்பை ஆகிய இடங்களில் ஸ்கேன் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# குரங்குக் குட்டியை காப்பாற்ற பொலிஸ் நிலையத்தில் வழக்கு



(புவனேஸ்வரம்)

ஒரிசா மாநிலம் பூரி மாவட்டத்தில் உள்ள ஆஸ்ட ராஞ்ச் நகரில் ஏராளமான குரங்குகள் உள்ளன. இவற்றில் ஒரு பகுதி சந்தைப் பகுதியில் வசிக்கின்றன. இதில் ஒரு பெண் குரங்கு 3 மாத குட்டியுடன் இருக்கிறது. இந்த குட்டியை கொல்ல ஆண் குரங்கு ஒன்று தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

அந்த ஆண் குரங்கு குட்டியின் தந்தையாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

ஆண் குரங்கு இந்த குட்டியை கொன்று விடாமல் தடுக்க தாய் குரங்கு எப்போதும் தன் குட்டியை தன்மடியிலேயே வைத்துள்ளது. அதை சுற்றி மற்ற குரங்குகள் பாதுகாப்பாக நிற்கின்றன. இருந்தும் ஆண் குரங்கு குட்டியை கொல்லும் நோக்கத்துடன் அடிக்கடி தாக்கி வருகிறது. .அதை மற்ற குரங்குகள் சண்டையிட்டு விரட்டி வருகின்றன. இதை பார்த்த ஊர் பொதுமக்களும் ஆண் குரங்கை விரட்டி அடித்து வருகின்றனர். ஆனாலும் ஆண் குரங்கு குட்டி குரங்கை குறிவைத்து சுற்றி சுற்றி வருகிறது.

இதனால் பொதுமக்கள் பொலிஸில் புகார் கொடுக்க முடிபு செய்தனர். தாய் குரங்கு நேரடியாக புகார் கொடுப்பது போல ஒரியா மொழியில் மனு ஒன்றை தயாரித்தனர். அதன் கீழ் கைரேகைக்கு பதில் குரங்கின் வால்பகுதியை மையில் நனைத்து பதிவு செய்தனர்.

அதை பொலிஸ் நிலையத்தில் கொடுத்தனர். தாய் குரங்குக்கு சிமியன் என்றும் ஆண் குரங்குக்கு ராஜா என்றும் குட்டி குரங்குக்கு குணா என்றும் மக்கள் பெயரிட்டு இருந்தனர்.

சிமியன் கொடுத்துள்ள புகாரில் என் குழந்தையை எனது கணவர் ராஜா கொல்ல முயற்சித்து வருகிறார். அவரிடம் இருந்து என் குழந்தையை பாதுகாக்க வேண்டும். கணவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பூகாரை பெற்றுக் கொண்ட பொலிஸார் தந்தை குரங்கு ராஜா மீது கொலை முயற்சி, கடத்தல் ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஆனால் பொலிஸார் என்ன செய்துவிட முடியும். குட்டியை காப்பாற்றும் வித்ததில் பொது மக்களே தடியுடன் ஆண் குரங்கை கண்காணித்து வருகின்றனர். (ஓ-6)

# இலங்கை, சீன இராணுவத்தினர் இணைந்து தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம், கோட்டைப்பட்டினம் மீனவர்கள் மீது தொடர்ந்து இலங்கை இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும் அவர்களின் வலைகளையும் அறுத்து எறிந்து அட்டூழியம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த மீனவர் கோவிந்தசாமி (55) என்பவர் இந்திய எல்லை 6ஆம் பாகத்தில் படகில் மீன் பிடித்து கொண்டு இருந்தார்.

அப்போது அங்கு ஒரு படகில் இலங்கை கடற்படையினர் வந்தனர். அவர்களுடன் சீன இராணுவத்தினர் சிலரும் இருந்தனர். அப்போது சீன இராணுவத்தினர் கோவிந்த சாமியை தாக்கி அவரது உடலில் சுடு தண்ணீரை ஊற்றினர்.

படுகாயத்துடன் தப்பி கரை திரும்பிய மீனவர் கோவிந்தசாமி இது குறித்து அறந்தாங்கி ஆர்.டி.ஓ. நாகேந்திரனிடம் புகார் செய்துள்ளார். அதில் தன்னை சீன இராணுவத்தினர் தாக்கி கொதிக்கும் சுடு தண்ணீரை ஊற்றியதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தினருடன் சேர்ந்து சீன இராணுவத்தினரும் தாக்கியது புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)

## வெலகெதரவின் துல்லியமான வேகத்தில்

# சரிவு கண்ட இந்திய அணியை சதமடித்து மீட்டனர் டிராவிட், தோனி


வெலகெதர

டிராவிட், தோனி ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6விக்கெட்டுகளையிழந்து 385 ஓட்டங்களை எடுதிருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இலங்கை அணி 3டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5ஒரு நாள் பேட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று அகமதா பாத்தில் ஆரம்பமானது.

இப் பேட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளி த்தது.


இலங்கை அணியின் ஆரம்ப வேகப் பந்து வீச்சாளர் வெலகெதரவின் துல்லியமான பந்துவீச்சில் கௌதம் காம்பீர் 1ஓட்டத்துட னும், வீரேந்திர சேவாக் 16 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 4ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 6.4 ஓவர்களில் 31 ஓட்டங்களை எடுத்து 3விக்கெட்டுகளை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய டெஸ்ட் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் வி.வி.எஸ். லக்ஸ்மன் வந்த வேகத்திலேயே பூச்சியத்துடன் பிரசாத்தின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து ஏமாற்ற, இந்திய அணி 7.4 ஓவர்களில் 32 ஓட்டங்களையெ டுத்து 4விக்கெட்டுகளையிழந்து திணறியது.

இந்நிலையில் 5வது விக்கெட்டுக்காக டிராவிட்டுடன் ஜோடிசேர்ந்த யுவராஜ் சிங் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டம் சரிவிலிருந்த இந்திய அணிக்கு நம்பிக்கையளித்தது. இதில் நிதானமாக துடுப் பெடுத்தாடிய ராகுல் டிராவிட் 77 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் யுவராஜ் சிங்கும் 77 பந்தில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இந்திய அணி


டிராவிட்

35.3ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொர்ட்டது.

இந்த ஜோடி 5வது விக்கெட்டுக்காக 125 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது யுவராஜ் சிங் 93 பந்துகளில்(13 பவுண்டரிகள் உட்பட) 68 ஓட்டங்களையெடுத்து முரளிதரனின் பந்துவீச்சில் டில்சானிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 6வது விக்கெட்டுக்காக டிராவிட்டுடன் இணைந்த அணித்தலைவர் தோனி சிறப்பாக துடுப்பெடுத்தாட இந்திய அணி 45.4ஓவர்களில் 200 ஓட்டங்களை எட்டியது. இதில் ஆரம்பமுதலே பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய ராகுல் டிராவிட் 158 பந்துகளில் தனது 27 டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

மறுமுனையில் அணித்தலைவர் தோனி 80வது பந்தில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 61.4ஓவர்களில் 250 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடியினை பிரிக்க இலங்கை அணித்தலைவர் சங்கக்கார களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்கவில்லை. இதில் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 154வது பந்தில் தனது 2வது டெஸ்ட் சதத் தைப்பூர்த்தி செய்ய இந்திய அணி 80.2 ஓவர்களில் 350 ஓட்டங்களை எட்டியது.

எனினும் மகேந்திரசிங் தோனி 159 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 110 ஓட்டங்களை எடுத்து பிரசாத்தின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி 90 ஓவர்களில் 6 விக்கெட்டுகளையிழந்து 385 ஓட்டங்களையெடுத்தது.

இதில் ராகுல் டிராவிட் 251 பந்துகளில் (26 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 177 ஓட்டங்களையும், ஹர்பஜன் சிங் 2ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் வெலகெதர 17 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 75 ஓட்டங் களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும், தம்பிக்கப் பிரசாத் 2 விக்கெட்டுக



தோனி

ளையும், முத்தையா முரளிதரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாவது நாள் ஆட்டம் இன்றாகும்.

# சிமித், போஸ்மென் 'ரன்' மழை; தென்னாபிரிக்கா சாதனை வெற்றி

(செஞ்சூரியன்)

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 84ஓட்டங்கள் வித்தியாசத்தில் சாதனை வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடர் 1-1 என சமநிலையில் முடிந்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இங்கிலாந்து அணி இரண்டு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடியது. முதல் பேட்டியில் இங்கிலாந்து வென்றது. இரண்டாவது பேட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் நடந்தது.

இப்பேட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அணித் தலைவர் சிமித், போஸ்மென் ஜோடி அதிரடி ஆரம்பம் கொடுத்தது. இங்கிலாந்து பந்து வீச்சை விளாசித் தள்ளிய இவர்கள் பவுண்டரி, சிக்ஸர் மழை பொழிந்தனர்.

முதல் விக்கெட்டுக்கு 170 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சிமித் 44பந்துகளில்(8 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 88 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்து வந்த டிவிலியாஸ் (24), கலிஸ் (7) நீண்ட நேரம் நிலைக்கவில்லை. அபார ஆட்டத்தைத் தொடர்ந்த போஸ்மன் 45 பந்துகளில் (5 பவுண்டரிகள், 9 சிக்ஸர்கள் உட்பட) 94 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். தென்னாபிரிக்க அணி 20ஓவர்களில் 6 விக்கெட்டுகளுக்கு 241 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு கடின இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணி டென்லி(14), அணித்தலைவர் குக்(26)ஓட்டமெடுத்து ஏமாற்றமளித்தனர். பின்னர் ரைற் (51), பீற்றர்சன் (29) ஜோடி ஆறுதலளித்தது. அடுத்து வந்தவர்கள் ஏமாற்ற இங்கிலாந்து அணி 20ஓவர்களில் 8விக்கெட்டு களையிழந்து 157 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது. ஆட்ட நாயகனாக போஸ்மென் தேர்வு செய்யப்பட்டார்.

**சாதனை மழை**

இப் பேட்டியில் தென்னாபிரிக்கா சார்பில் 17 சிக்ஸர்கள் விளாசப்பட்டன.

இதன்மூலம் இருபது-20 அரங்கில் ஒரு இன்னிங்சில் அதிக சிக்ஸர் அடித்த அணி என்ற சாதனை படைத்தது. முன்னதாக கடந்த 2007ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த பேட்டியில் அவு ஸ்தி ரேலிய அணி இங்கிலாந்துக்கு எதிராக 14 சிக்ஸர்கள் அடித்திருந்தது.

தென்னாபிரிக்காவின் சிமித்-போஸ்மென் ஜோடி முதல் விக்கெட்டுக்கு 170 ஓட்டங்களை சேர்த்தது. இதன்மூலம் இருபது-20 அரங்கில் எந்த ஒரு விக்கெட்டுக்கும் அதிக ஓட்டங்கள் சேர்த்த ஜோடி என்ற புதிய சாதனை படைத்தது. தென்னாபிரிக்கா (17 சிக்ஸர்), இங்கிலாந்து (6சிக்ஸர்) இணைந்து 23 சிக்ஸர் விளா சின. இதன்மூலம் ஒரு பேட்டியில் அதிக சிக்ஸர் விளாசிய அணிகள் வரிசையில் இரண்டாவது இடம் பிடித்தது. முதலிடத்தில் இந்தியா, நியூசிலாந்து (24 சிக்ஸர் 2009)அணிகள் உள்ளன.


ஒரே இன்னிங்சில் அதிக சிக்ஸர் விளாசிய வீரர்கள் வரிசையில் தென்னாபிரிக்காவின் போஸ்மென்(9சிக்ஸர்)2வது இடம் பிடித்தார். முதலிடத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர்(10சிக்ஸர்) ஹயில் உள்ளார். ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்களை எடுத்த அணிகள் வரிசையில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இடம் (241 ஓட்டம்) பிடித்தது முதலிடத்தில் இலங்கை அணி( 6விக்கெட்டுகளுக்கு 260 ஓட்டம், 2007 எதிர் - கென்யா, இடம்-ஜோகனஸ் பேர்க்) உள்ளது.

# மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் பொன்டிங் விளையாடுவதில் சிக்கல்



(கொல்கத்தா)

மூன்றாவது ஐ.பி.எல் இருபது-20 தொடரில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் விளையாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இவர் அவுஸ்திரேலிய அணிக்காக சர்வதேச பேட்டியில் பங்கேற்கவிருப்பதால் 8அல்லது 9 பேட்டிகளில் பங்கேற்கமாட்டார்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) சார்பில் 3வது இருபது-20 தொடர் அடுத்த ஆண்டு மார்ச் 12ஆம் திகதி முதல் ஏப்ரல் 25ஆம் திகதிவரை இந்தியாவில் நடக்கிறது. இக்கால கட்டத்தில் அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்துப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் ஒரு நாள் இருபது-20 தொடர்களில் பங்கேற் கிறது.

இதனால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில்உள்ள அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் சில பேட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இது குறித்து கொல்கத்தா அணியின் தலைவர் சௌரவ் கங்குலி கூறுகையில், பொன்டிங் அவுஸ்திரேலிய அணிக்காக விளையாட இருப்பதால் ஐ.பி.எல் தொடரில் முதல் 8அல்லது 9 பேட்டியில் பங்கேற்க மாட்டார். இவருக்கு பதிலாக சரியான மாற்று வீரரை அணி நிர்வாகம் தேர்வு செய்யவுள்ளது.

இது தவிர ஐ.பி.எல் நிர்வாகம் அனுமதியளிக்கும் பட்சத்தில் எங்கள் அணியிலுள்ள பாகிஸ்தான் வீரர்கள் இத் தொடரில் விளையாடுவார்கள்.


கடந்த இரண்டு தொடரில் ஏமாற்றிய கொல்கத்தா அணி இம்முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதிக்கும். இதற்கு பயிற்சியாளர், அணித்தலைவர் மற்றும் சக வீரர்கள் அனைவரும் ஒத்துழைப்புக் கொடுப்பார்கள் என நம்புகிறேன் என்றார்.


# இலங்கைக்கு முதல் தங்கம்

சீனாவில் குவாங்சு நகரத்தில் 18ஆவது ஆசிய மெய்வல்லுநர் பேட்டிகள் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதில் இலங்கையின் மஞ்சுள குமார விஜயசேகர என்பவர் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர்களிற்கான உயரம் பாய்தல் பேட்டியில் இலங்கைக்கு முதன்முதலாக தங்கப்பதக்கம் ஒன்றைப் பெற்றுக்கொடுத் தார்.

2.10 மீற்றர் உயரத்தை தெரிவு செய்து பாய்வதற்கு ஆரம்பித்த விஜயசேகரா 2.26 மீற்றர் உயரத்தையும் பாய்வதற்கு முயற்சி செய்து ஒரு முறை பௌலாகியதைத் தொடர்ந்து 2.23மீற்றர் உயரத்தை பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.





பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து நேற்று யாழ். வின்சர் தியேட்டர் சந்தியிலுள்ள பெற்றோல் நிலையத்தில் பெருமளவானோர் வரிசையில் காத்துநின்றனர். பெற்றேல் நிரப்பு நிலையத்திலிருந்து மின்சார நிலைய வீதி வரையுமாக கஸ்தூரியார் வீதியில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோக்கள் நேற்று வரிசையில்காணக் கூடியதாக இருந்தது. பொலிஸாரின் நேரடிக் கண்காணிப்பில் பெற்றோல் விநியோகிக் கப்பட்டதால் குழப்பம் எதுவும் ஏற்படவில்லை பெற்றோலுக்கு காத்திருப்போரைபடங்களில் காணலாம்.

# குருநகர் கடலில் வலம்புரிச் சங்கு



குருநகர் குடாகடல்பகுதியிலிருந்து வலம் புரிச்சங்கு ஒன்று கடற்தொழிலாளர் ஒருவரினால் எடுக்கப்பட்டது. நேற்று கடல்தொழிலுக்குச்சென்ற அவர் வலம்புரிச் சங்கை எடுத்துள்ளார். எடுக்கப்பட்ட வலம்புரிச்சங்கு உடனடியாக 33 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அந்த வலம் புரிச்சங்கையே படத்தில் காண்கிறீர்கள் *(படம்:- நெல்சன்)*

# சிறைச்சாலைக் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

இலங்கையின் பல்வேறு சிறைகளில் இருக்கும் சிறைக்கைதிகள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது குறித்து கொழும்பு சிறையிலிருக் கும் கைதி ஒருவர் தெரிவித்ததாவது,

கடந்த 13ஆம் திகதி சிறைஅதிகாரிகளாலும் மற்றும் அங்கிருக்கின்ற பாதாள உலகக் கோஷ்டிகளாலும், ஒரு சிலராலும் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பவத்திற்காக இலங்கையிலிருக்கின்ற அனைத்து சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள் மற்றும் புனர்வாழ்வு நிலையங் களிலிருந்து 10 ஆயிரத்திற்கும்மேற்பட்ட கைதிகள்வந்து இப்போது அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டோம்.

சிறைச்சாலையில் இனிமேலும் இப்படியான சம்பவங்கள் நடக்கக்கூடாது. இதற் கான நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும். மற்றது சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு உறுதியான பாதுகாப்பு அளிக்க வேண்டும். இது போன்ற கோரிக்கைகளை வைத்தே உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ச-3)

# பொன்சேகாவின் பிரியாவிடை...

ஓய்வு பெறுவதாக குறிப் பிட்டுள்ளார்.

கூட்டுப்படைகளின் பிரதானி பதவியிலிருந்து சரத் பொன்சேகா நேற்று உத்தியோக பூர்வமாக ஓய்வு பெற்றார்.

எதிர்வரும் 1 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவதாக ஜனாதிபதி ராஜ பக்ஷவிடம் சரத் பொன்சேகா கடந்த 12ஆம் திகதி கடிதம் ஒன்றை கையளித்திருந்தார்.

அவருடைய கடிதத்தை ஜனாதிபதி உடனடியாக ஏற்றுக் கொண்டதையடுத்து கூட்டுப்படைகளின் பிரதானி நேற்று தனது பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவருடைய ஓய்வினை முன்னிட்டு நேற்று இராணுவத்தலைமையகத்தில் விஷேட பிரியாவிடைவைபவம் ஒன்று இடம் பெற்றது. இந்த வைபவத்தில் ஓய்வு பெற்ற முன்னாள் கூட்டுப் படைகளின் பிரதானி ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும், செங்கம்பள வரவேற்பும் அளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தின் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஓய்வு பெற்ற கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சரத் பொன்சேகா,தான் 40ஆண்டு காலமாக இராணுவத்தில் சேவையாற்றியதாகவும் எதிர்காலத்தில் நாட்டிற்குச் சேவையாற்ற எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் தான் சேவையாற்றவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தனது எதிர்காலம் மற்றும் தனது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் இன்னும் 2நாட்களில் ஊடகங்கள் மூலம் தெரிவிக்க எண்ணியுள்ளதாகவும், இது வரைகாலமும் தனக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்து டன் எதிர்வரும் காலங்களிலும் ஊடகவிய லாளர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதா கவும் இந்த நாட்டிற்காக தான் இராணு வத்தளபதி மற்றும் இராணுவத்திலுள்ள அனைத்துப் பதவிகளிலிருந்தும் சேவை யாற்றியுள்ளதோடு இந்தச் சேவைகளை இந்த நாட்டிற்கு உச்சமான முறையில் வழங்கியதையிட்டு தான் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறேன் என்றார்.

அது மாத்திரமன்றி யுத்தத்தின் போது தன்னுடன் கடமையாற்றி உயிரை தியாகம் செய்தோரையும் காயமடைந்து ஊனமானவர்களையும் யுத்தத்தில் வெற்றிபெற்ற போது தன்னுடன்பணியாற்றிய அனைத்து இராணுவத்தினரையும் அவர் நினைவு கூர்ந்தார். (ச-3,5)

# ஊழியர்களி...

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொழிற் சங்க நடவடிக்கைகளை தொடரப் போவதாக அறிவித்துள்ளனர். (ச-5)

# கூட்டமைப்பின் ஆதரவை...

முஸ்லிம் காங்கிரஸிடமும், மனோகணேசனிடமும் ரணில் ஒப்படைத் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்பேசும் சிறுபான்மைக்கட்சிகளின் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கிம் திடீரென ரணில் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்புக்குத் தாவினார். இதனால் சிறுபான்மைக்கட்சிகளின் கூட்டமைப்பு முயற்சி சிறுதடங்கலுக்குள்ளாகி, தற்போது அது தனித்தமிழ்க் கட்சிகளின் கூட்டணியாக உருவாக்கப்பட வேண்டுமென்ற நோக்குடன் தமிழ்க் கட்சிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின் றன.

இந்சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் வடக்குக்கிழக்கு மக்களது வாக்குகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுவதால் அவற்றை பெறுவதற்கு தமிழ்த் தலைமைகளுடன் பேச்சு நடத்துவதற்கு எதிர்கட்சிகளின் கூட்டணித்தலைவர் ரணில் ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசனையும் நியமித்துள்ளார் என்று கட்சிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தேர்தல் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த முடிபையும் அறிவிக்கப் போவதில்லை என்ற தீர்மானத்துடனிருப்பதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# மக்கள் கேட்ட தேர்தலை நடத்த...

எந்த தேர்தல் முதலில் வேண்டும் என கேட்டார்.

இதற்கு ஜனாதிபதி தேர்தலே முதலில் வேண்டும் என மக்கள் தெரிவித்தனர். இதனை பொருட்படுத்தாத அவர் எந்த தேர்தல் நடைபெறும் என் பதை கட்சியே தீர் மானிக்கும் என நழுவல் போக்கில் பதிலளித்துள்ளார். இதனால் ஜனாதிபதி மக்கள் ஆணையை நிறைவேற்றும் பொருட்டு உடனடியாக ஜனாதி பதி தேர்தலை நடத்த வேண்டும்.

அத்துடன் பயங்கரவாதத்தை தோற்கடிக்க தமது பங்களிப்பைச் செய்த அனைத்துப் படை அதிகாரிகளுக்கும் வாழ்நாள் முழுவதும் உச்சப்பட்ச பாதுகாப்பு வழங்கப்படும் என்ற சட்ட மூலமொன்று நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இவ்வாறு உச்சபட்ச பாதுகாப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் இதற்கு மாறாக ஓய்வு பெற்றவுடன் முன்னாள் கூட்டுப்படைகளின் பிரதானி ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பு பலமடங்காக குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர்தாம் இதனை முழுமையாக கண்டிப்பதுடன் இது குறித்து அதிருப்தி கொள்வதாகவும் கூறினார்.

இதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கவுள்ளதாகவும் கூறினார். இவ்வாறான ஒரு நிலைமையில் இந்த அரசாங்கம் சர்வதேசத்தை தம்முடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளமையானது வேடிக்கையான விடயம் என குறிப்பிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் உள்நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்த இந்த நாட்டின் முன்னாள் இராணுவத்தளபதியையே ஓரங்கட்டியுள்ள இந்த அரசாங்கம் எவ்வாறு சர்வதேசத்துடன் இணைந்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்கப் போகின்றது என்று கேள்வி எழுப்பினார்.

# அமைச்சர்...

செய்த வாகனம் கடுமை யாக சேதமடைந்த போதும் அவர் சிறுகாயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதியை கடக்க முயன்ற சிறுவனுக்காக வாகனத்தை சடுதியாக திருப்பிய போது இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# 200 வருட சிறைத்தண்டனை...

கொழும்பிற்கு கொண்டு வந்தார் என குற்றச் சாட்டப்பட்ட நிலையில் அவருக்கு 200 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் கைது செய்யப்பட்டவர் தற்போது குற்றத்தடுப்புப் பிரிவினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். செல்லத்தம்பி நவரட்ணம் என்ற இவர் செட்டிக்குளம் பிரதேசத்தில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்ட யுத்தத்தின் போது வெள்ளமுள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இருந்து அரச கட்டுப்பாட்டில் உள்ள இடம் பெயர்ந்த முகாம்களில் சில காலம் தங்கியிருந்ததாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இடம் பெயர்ந்தவர்களை மீள பதிவு செய்யும் செயல் திட்டத்தின் கீழ் 60 வயதானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்த போதே 53 வயதான இவர் போலியான தகவல்களை வழங்கி உடரிக்குளம் பிரதேசத்தில் மீள் குடியேறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது தேசிய அடையாள அட்டை முகவரியின்படி மருதநகர் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்ததை அடுத்து அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்...

மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியூதீனின் ஏற்பாட்டில் கூட்டமைப்பின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 10 பேர் அடங்கியகுழுவினர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கொழும்பு இரத்மலானை விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிறிகாந்தா, பா.அரியநேத்திரன், ஐ.எம். இமாம், டாக்டர் தோமஸ்வில்லியம் தங்கத் துரை மற்றும் ரெலோ செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திர குமார் ஆகியோர் உட்பட 10 பேர் நேற்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக மீள் குடியேற்ற அமைச்சு தெரிவித்தது.

ஏற்கனவே வவுனியாவில் தங்கியிருக்கும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், விநோநோகராத லிங்கம், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் வவுனியாவில் இணைந்து கொண்டனர்.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய இடங்களுக்குச்சென்று அங்கு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களைசந்தித்து அவர்களுடன் உரையாடி நிலைமைகளை கேட்டறிந்து கொண்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்தார்.

மக்களை சந்தித்தபோது மன்னார், வவுனியா, கிளிநொச்சி அரச அதிபர்களும் கலந்து கொண்டதாகவும் சந்திப்பு முடிபடைந்த பின்னர் விமானத்திலேயே மாலை கொழும்பு திரும்பியதாக அரியநேந்திரன் சொன்னார்.

இதேவேளை தரைப்பாதையால் சுயதீனமாகச் சென்று வருவதற்கு அனுமதி வழங்குமாறு கூட்டமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வவுனியா நலன்புரி முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டு ஆறுமாதங்கள் ஆன நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களை அரசு அழைத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.